# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.

OFFICE OF THE REGISTRAR
No.
7-DEC 1928
MADRAS

தொகுதி - ௨] | விபவஞு-கார்த்திகைமீ | [பகுதி - ௰௧

## உள்ளடக்கம்.

| | |
|---|---|
| தென்னிந்திய செங்குந்தர் 1வது மகாநாட்டின் முக்கியமான அறிக்கை. | |
| செங்குந்த முதலிமார் மடங்கள் II ... | ௩௱௭௩ |
| ஆராய்ச்சிப் பகுதி : திருமுருகாற்றுப்படை. | ௩௱௭௬ |
| யாழ்ப்பாணம் செங்குந்தர் சங்கஆராய்ச்சி ... | ௩௱௭௭ |
| திவ்விய க்ஷேத்திரங்கள் : பழநிப்பதி ... | ௩௱௮௧ |
| மாதர் பகுதி : சீர்சால் மகளிர் ... | ௩௱௮௨ |
| மாணவர் பகுதி : இரண்டு சிறுவர்கள் .... | ௩௱௮௫ |
| சுகாதாரப் பகுதி : முறை ஜுரம் ... | ௩௱௮௮ |
| தொழிற்பகுதி : கைத்தறி, இயந்திரத்தறி ... | ௩௱௯௰ |
| தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்து நிருவாக சபையின் தீர்மானங்கள் ... | ௩௱௯௨ |
| தலைச்சங்கத்தாரின் சுற்றுப்பிரயாணம் ... | ௩௱௯௪ |
| செங்குந்தர் கிளர்ச்சி ... | ௩௱௯௫ |
| அற்பிசி மாதத்திற்குத் தலைச்சங்கத்திற்குச் செலுத்திய மகமை உண்டியல் முதலியன. | ௪௱ |
| 1928ஞு சந்தா செலுத்திய நேயர்கள் .... | ௪௱௧ |
| வீடுபுனை பந்தம் கெ. 1 ... | ௪௱௩ |
| செங்குந்தர் பஞ்சாங்கம் ... | ௪௱௪ |

**தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்**

**கெ. 31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.**

# தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகா

## ஒரு முக்கியமான அறிக்கை.

சங்கங்கள் ஏற்பட்டுள்ள செங்குந்தர் கிராமங்களிலிருந்தும், சங்கங்கள் இல்லாத செங்குந்தர் கிராமங்களிலிருந்தும் ஈரோட்டில் அடுத்த தை மாதம் கூடவிருக்கும் மகாநாட்டிற்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அவர்கள் பெயர்களை டிசம்பர் மாதம் 25 தேதிக்குள் 'தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாட்டின் வரவேற்புச் சபைத்தலைவர், ஈரோடு' என்னும் விலாசத்துக்காயினும், அடியில் கையொப்ப மிட்டிருப்பவருக்காயினும் தெரிவிக்கச் செங்குந்தர் சங்கக் காரியதரிசிகளும் ஒவ்வொரு செங்குந்தர் கிராமத்திலுள்ள முக்கியஸ்தர்களும் வேண்டிக்கொள்ளப்படுகின்றனர். மகாநாட்டில் பிரேரேபிக்க வேண்டிய தீர்மானங்களையும் குறிப்பிட்டு ஷை தேதிக்குள் அறிவிக்க வேண்டிக்கொள்ளப் படுகின்றனர். இதர விவரங்கள் அடுத்த மாதத்துச் செங்குந்தமித்திரனிலும் அப்போதைக்கப்போது தமிழ் தினசரி பத்திரிகைகளிலும் வெளிவரும்.

சென்னை,
1—12—28.

ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.,
அமைச்சர், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்,
31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

---

முதல்தரமான வேலைப்பாடு! நம்பிக்கையான வேலைக்காரர்கள்!!

## நகைகள்! நகைகள்!

குறைந்த சார்ஜுகள்.

நாங்கள் சீமைக்கமலங்களிலும், இதர கற்களிலும் குறைந்த கூலியில் கண்களைக் கவரும்படியான விதமாய் வேலைகள் செய்து கொடுக்கிறோம். தவிர நாங்களே உங்கள் மனதிற்குப் பிடித்த நல்ல கற்களையும் வாங்கிக்கொடுக்கிறோம். இதர பொன் வெள்ளி வேலைகளும் மெடல்களும், என்கிரேவிங் வேலையும் செய்து குறித்த காலம் தவறாமல் கொடுக்கின்றோம். எங்களிடம் ஒருதரம் ஆர்டர் செய்து பாருங்கள். ஒருமுறை ஒரு சிறிய ஆர்டர் கொடுத்துப் பரீக்ஷித்துப் பாருங்கள்.

ஆர்டர்படிக்கு வி.பி.யிலும் நகைகள் தயார் செய்து அனுப்புகிறோம்.

ராஜரத்தினம் பிரதர்ஸ்,
நகைவேலைக்காரர்கள், நெ. 8, இரண்டாவது தெரு, புதுப்பேட்டை, மதராஸ்.

---

## இரகஸ்யம்.

ஒரு யோகீஸ்வரரால் அனுக்கிரகம் செய்யப்பட்டது அநேகம் பிரபுக்கள் பரீட்சை செய்து நற்சாட்சி பத்திரங்களும் அளித்திருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் அதிக பிரயோஜனத்தைத் தரத்தக்கதாதலால் இது உலோகோபகாரமாய் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இது தளர்ந்த தேகத்தைக் கெட்டிப்படுத்தி, நரம்புகளுக்கு வலுவேற்றித் தேகபுஷ்டி கை, கால், இடுப்பு, மார்பு, முதலிய உருப்புகளின் வலிவு, சுறுசுறுப்பு, சந்தான உற்பத்தி, பேரானந்தம், மனோதைரியம் முதலியவைகளை உண்டுபடுத்தி, மெலிந்து தளர்ந்துபோன வயோதிகரும் வாலிபருடைய சகல சுகங்களையும் அனுபவிக்கச் செய்யும் மேகவெட்டை, வாய்வு, மலபந்தம், பசியின்மை முதலிய வியாதிகளை நீக்கி, தேகாரோக்கியத்தை உண்டாக்கிவிடும். ஒரே வேளை மருந்தில் சொர்பனஸ்கலிதம் துரிதஸ்கலிதம் முதலியவைகளை நீக்கித் தாதுவை வஜ்ஜிரத்தைப்போல் கெட்டிப்படுத்தி, நரம்புகளுக்கு முறுக்கேற்றி ரகவிய இன்பத்தை உண்டாக்கி விடுமென்பது உண்மை. இதற்குப் பத்தியமில்லை. புட்டி 1-க்கு இரண்டு ரூபாய் மூன்று புட்டி வாங்கினால் தபால்செலவு கிடையாது. இவ்வற்புத சஞ்சீவியின் பெயர் கற்பகவிந்தாதி லேகியம். வேண்டுவோர்,

மானேஜர், கற்பக மெடிகல் ஹால்,
சுவாமிமலை போஸ்ட், S. இந்தியா என்னும் விலாசத்திற்கு எழுதவும்.

---

(1)

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

[ஆசிரியர்: ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.]

| தொகுதி - உ | விபவ௵ - கார்த்திகை௴ | பகுதி - ௰௧ |
|---|---|---|

DEC 1928

முருகன் துணை.

பாவியேன் படுந்துயருக் கிரங்கியருட் டணிகையிலென் பால்வா வென்று
கூவிநீ யாட்கொளவோர் கனவேனுங் காணேனே துணைப்போந்தன்றே
ஆவியே யறிவேயே யன்பேயே னரசேநின் னடியைச்சற்றும்
சேவியே னெனினுமெனைக் கைவிடே லன்பர்பழி செப்புவாரே.

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### செங்குந்த முதலிமார் மடங்கள்

### II

#### பழநியில் முதலிமார் மடங்களும் தர்மங்களும்

நம்மவர்கள் பூர்வீகமாய் வசித்துவரும் முக்கியமான நகரங்களுள் பழநிப்பதியொன்று. இதுவே வையாபுரி நாட்டுத் தலைநகரம். இந்நகரத்தைப்பற்றிய சில விவரங்கள் மற்றோரிடத்து ஆண்டுப் புதிதாய் யாத்திரைக்குச் செல்வோருக்குப் பயன்படுமாறு சுருக்கமாய்ப் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இங்கு நம் முன்னோர்கள் பல மடங்களையும், தர்மங்களையும் ஏற்படுத்தி யிருகின்றனர். அவற்றுள் முக்கியமான சிலவற்றின் விவரம் ஈண்டுரைப்பாம்: அவையாவன:—

1. மலையடிவாரத்தில் சந்நிதி வீதியின் கீழண்டைவாடையிலுள்ள தண்ணீர்ப் பந்தல் மடம்.

2. ஷை வீதியில் மேலண்டைவாடையிலுள்ள முத்துக்குமாரசுவாமி கோவிலும், தர்ம மடமும்.

3. பழநி டவுன் மேலரத வீதியில் மேலண்டை வாடையிலுள்ள தர்மமடம்.

4. திருவாவினன்குடி கோயில் கொடியேற்று முன் மண்டபம்.

5. பழநி டவுன் ஸ்ரீ பெரியநாயகியம்மன் கோயில் கொடியேற்று முன் மண்டபம்.

6. மலைமேற் செல்லும் வழியின் மத்தியிலுள்ள இடும்பன் கோயிலும், குழந்தை வேலப்பர் சந்நிதியும்.

7. மலைக்கோயில் உட்பிரகாரத்தின் ஈசான்ய மூலையிலுள்ள நவவீரர் கோயில்.

1. அநேக வருஷங்களாகத் தண்ணீர்ப்பந்தல் வைத்து நடத்திவரும் இந்த இடத்தில் தற்போதுள்ள கட்டடம் சமீபத்தில் கட்டப்பட்டது.

இது சிறிய கட்டடமாயினும் வடபுறம் மூன்று அறைகளும், தென்புறம் இரண்டு அறைகளும் மத்தியில் கல்யாண கூடமும் அமைந்து அழகாகக் கட்டப்பட்டிருக்கிறது. இதன் மேற்பரப்பு முழுதும் தளமாகையால் மேல்மாடியில் ஓடு வேய்ந்த தாழ்வாரங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. தெருப்பக்கத்தில் இரண்டு கடைகள் வாடகைக்கு விடப்பட்டிருக்கின்றன. ஆயினும் கட்டடவேலை இன்னும் பூர்த்தியாகவில்லை. சமையலுக்கு வேண்டிய கட்டடமும், போதிய இடமும், ஜலாதாரத்திற்காகக் கிணறும் இல்லாதிருப்பது பெருங்குறை யென்றே சொல்ல வேண்டியிருக்கிறது. இவ்விஷயங்களில் தர்ம சிந்தையும், குலாபிமானமுமுள்ள கனவான்கள் கூடிய சீக்கிரம் தக்க முயற்சி செய்வார்களென்றே நம்புகிறோம். திருப்பூர் சாக்கு மண்டி திருவாளர் அருணப்ப முதலியார் அவர்கள் இவ்விடத்தில் கிணறு எடுப்பதற்குப் பொருளுதவி செய்வதாக ஒப்புக்கொண்டிருப்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. இக்கட்டட விஷயமாக வேலாயுதம் பாளையம் புதூர் ஜவுளி தான்யமண்டி திருவாளர் கூ. வ. இராமசாமி முதலியார் அவர்கள் பெருமுயற்சி எடுத்துக் கொண்டதாகவும், பழனி பாத்திரக்கடை குழந்தைவேல் முதலியார் முதலிய பல குலாபிமானிகள் இப்பொதுச் சேவைக்கு உடனிருந்து உதவிபுரிந்ததாகவும் கேள்விப்படுகிறோம்.

குலாபிமானமும் குலமுன்னேற்ற விஷயத்தில் அடங்கா ஆர்வமுங் கொண்டுள்ள திரு. முத்துலிங்க முதலியார் என்பவர் தற்போது மடத்தில் இருந்துவருகிறார். இவர், வாய்மை, பொறை, குலாபிமானம் முதலிய நற்குணங்கள் அமையப்பெற்றவர். நமது சங்கப்பிரதிநிதி சமீபத்தில் பழனிக்குச் சென்றிருந்தபோது, பிரசார விஷயமாய்ப் பேருதவி செய்தவரும் இவரேயாவர். இவரைப்போன்ற குலாபிமானிகள் நம்மடங்கள் தோறும் இருப்பாராயின், அவற்றுள் பல பிறரால் கைப்பற்றப்பட்டும், மற்று பல பரிதபிக்கத்தக்க நிலையையடைந்தும் இரா வென்பது திண்ணம். பல மடங்கள் சீர்கேடுற்றுள்ளதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றுள் மடங்களிலிருந்து வேலை பார்த்து வருவோருக்குப் போதிய வருவாய் தேடி வைக்காததும் ஒன்றாம். அக்குறை இவ்விடத்திலும் இல்லையென்று சொல்ல முடியாது.

2. சந்நிதி வீதி மேலண்டைவாடையிலுள்ள தர்ம மடம். இம்மடத்துக் கட்டடம் இலணயிருந்தபடியால் மதுரைச் செங்குந்த முதலிமார் முயற்சியால் தற்போது புதுப்பிக்கப்பெற்று வருகிறது. இம்மடத்திலுள்ள கிணறு எடுப்பதற்கு வேண்டிய பொருளுதவி செய்த திருப்பூர் சாக்குமண்டி திரு. அருணப்ப முதலியார் அவர்கள் மனைவியாரது குலாபிமானமும் தர்ம குணமும் பாராட்டத்தக்கன. முத்துக்குமார பண்டாரம் என்பவர் இம்மடத்தில் இருந்து வருகிறார். இவரிடத்தில் இம்மடத்துச் சம்பந்தமான பட்டயம் ஒன்று இருப்பதாகத் தெரிகிறது. இவர், சமீபத்தில் பழநிக்குச் சென்றிருந்த நமது சங்கப் பிரதிநிதிக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுத்தாராயினும், செங்குந்த பொதுஜனங்கள் இவரிடத்தில் நல்ல அபிப்பிராயங் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. பலர் இவர்மீது பல விடங்களில் நமது பிரதிநிதியிடம் குறைகூறியதாகத் தெரிகிறது. இனியாவது இத்தகைய புகார்களுக்கு இடந்தராதவாறு தக்க ஏற்பாடு செய்யுமாறு பழநி முதலிமார்களையும், மதுரை முதலிமார்களையும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

3. பழநி டவுன் மேலரத வீதியிலுள்ள மடம்—ஒரு பண்டாரத்தின் பார்வையிலிருந்து வருகிறது. இது ஒரு பழைய கட்டடம். இதில் அதிக இடவசதியிருப்பதாகவும், யாத்திரைவாசிகள் தங்கி இருப்பதற்கு (அடிவாரத்திற்கு வெகு தூரத்திலிருப்பதால்) அவ்வளவு உபயோகப்படுவதாகவும் தெரியவில்லை. வையாபுரி நாட்டுக் கூட்டமேடையாகிய காமாட்சியம்மன் மேடையொன்று இங்கிருக்கின்றது.

4 & 5. திருவாவிநன்குடி கொடியேற்று மூன் மண்டபமும், பழநி டவுன் கோயில் கொடியேற்றுமுன் மண்டபமும் பழைய கட்டடங்களாயினும் நல்ல நிலைமையில் இருக்கின்றன. இவற்றிற்கு வேண்டிய பழுது பார்த்தல் முதலியவற்றை இன்னும் நம்மவர்களே செய்து வருகிறார்கள்.

6. மலையின் மத்தியிலுள்ள குழந்தை வேலப்பர் சந்நிதியும், இடும்பன் கோயிலும் இரண்டும் ஒன்றன் பக்கலில் மற்றொன்றாக இருக்கின்றன. இடும்பன் கோயிலில் இடும்பன், அகஸ்தியர், கடம்பன் ஆகிய மூவர் மூர்த்தங்களும் இருக்கின்றன. இரண்டொரு வருஷங்களுக்கு முன் சுமார் 3000 ரூபாய்க்குமேல் செலவிட்டு இக்கோயிலை நம்மவர்கள் பழுது பார்த்து வைத்திருக்கின்றனர். இங்குப் பூஜை செய்யும் பண்டாரமே நைவேத்தியமும் தயாரிக்க வேண்டியிருப்பதால் மடப்பள்ளிக்கென ஒரு சிறு அறை அமைக்க வேண்டியது அவசியமென்றே கருதுகிறோம். ஐப்பசிமீ சஷ்டியன்று ஸ்ரீபழநியாண்டவர் சூரசம்மாரத்திற்குப் போகும் வழியில் மாலை 3-மணிக்கு இக்கோயிலில் மண்டபப்படி நம்மவர்கள் செய்து வருகிறார்கள்.



7. நவவீரர் கோயிலில் செவ்வந்தி பண்டாரமென்பவர் பூஜை செய்து வருகிறாராயினும் நைவேத்திய கட்டளை ஸ்ரீ பழனியாண்டவர் தேவஸ்தானத்தைச் சார்ந்தது. சஷ்டி சூரசம்மாரத்தன்று சத்திவேல் இக்கோயிலில் வைத்துப் பூஜிக்கப்பெற்ற பிறகுதான் சம்மாரத்திற்குப் புறப்படுவது வழக்கம். ஷை செவ்வந்தி பண்டாரத்தினிடத்திலும் ஒரு பட்டயமிருக்கிறது.

### நயினார் கோயில் முதலிமார் மடம்.

இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள பிரபல புராதன தலங்களுள் நயினார் கோயிலும் ஒன்றாம். இத்தலத்திற்கு உற்சவகாலங்களில் பதினாயிரக் கணக்கான ஜனங்களும் சாதாரண காலங்களில் பிரார்த்தனைக்காக அநேக ஜனங்களும் வருகிறார்கள். இங்குச் செங்குந்த முதலிமார் நன்மைக்காக ஒரு மடம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இம்மடம், மண்டலமாணிக்கம், அபிராமம், பரமக்குடி, அழகன்குளம், ரகுநாதபுரம், தேவகோட்டை, நயினார் கோயில், இளையான்குடி, மூவலூர், நகரம், பணிதிவயல் முதலிய கிராமச் செங்குந்தர்களால் பரிபாலிக்கப்பெற்று வருகிறது. இங்கெழுந்தருளியுள்ள ஸ்ரீசௌந்தரநாயகி சமேதராகிய ஸ்ரீநாகநாத ஸ்வாமியின் வைகாசி மாதத்தில நடக்கும் பிரம்மோற்சவத்தில் ஏழாம் நாள் இரவு ஷை ஸ்வாமிக்கு நமது மடத்தில் மண்டபப்படி நடத்துவதுண்டு. இம்மடத்தில் சில வருஷங்களாக அவுட்போஸ்டு போலீஸ் ஸ்டேஷன் இருந்து வருகிறது. ஜனங்கள் திரளாக வரும் உற்சவ காலங்களில் போலீஸ் அதிகாரிகள் மடத்தைக் காலிசெய்து விடுகிறார்களாயினும், சாதாரண காலங்களில் மடத்திற்குவரும் ஜனங்களின் சௌகரியத்தின் பொருட்டுப் போலீஸ் ஸ்டேஷன் நமது மடத்தில் இருப்பது கூடாதென்பது செங்குந்த பொது ஜனங்களின் அபிப்பிராயம். இது விஷயமாகப் பலதடவைகளில் பொதுஜனங்கள் கூடித் தீர்மானஞ் செய்து நயினார் கோயில் ஸ்ரீமான் அ. சு. நாகு முதலியார் முதலிய பிரமுகர்களைப் போலீஸ் ஸ்டேஷனை வெளியேற்றும்படிக் கேட்டுக்கொண்டும் ஷையார் அதைக் குறித்துக் கவனிக்காமலிருக்கிறார்கள் எனக்கேள்வியுற்று மிகவும் வருந்துகிறோம். பொதுஜன நன்மைக்கென ஏற்படுத்தப்பட்ட மடத்தில் பொதுஜனங்களின் அபிப்பிராயத்திற்கு விரோதமாகப் போலீஸ் ஸ்டேஷன் இருக்கும்படி ஏன் இடங்கொடுக்க வேண்டுமென்பது எமக்கு விளங்கவில்லை. இம்மடத்து விஷயமாகச் சிலநேயர்களிடமிருந்து எமக்குச் சில கடிதங்கள் வந்திருக்கின்றன.

இத்தகைய தாக்ஷண்யத்தாலும், அஜாக்கிரதையாலும் தான் நாம் அநேக மடங்களையும், கோயில்களையும், பண்டைச் சுதந்தரங்களையும் இழந்து கொண்டு வருகிறோம் என்பதை மறுபடியும் ஞாபகமூட்டுகின்றோம். இனியாவது நயினார் கோயில் சகோதரர்கள் கவனித்துப் போலீஸ் அதிகாரிகள் மடத்தைக் காலிசெய்து விடும்படி முயற்சிசெய்வார்களென நம்புகிறோம்.

சில மடங்கள் நல்ல நிலைமையிலிருந்த போதிலும் அநேக மடங்கள் சரியான பார்வையின்றிச் சீர்கேடுற்றிருக்கின்றன என்பது நம் சகோதரர்கள் அறியாததல்ல. ஆகையால் நமது மடத்து விஷயங்களைப்பற்றியும் சமீபத்தில் கூடவிருக்கும் நமது மகா நாட்டில் யோசிப்பது உசிதமென்றே எண்ணுகின்றோம்.

பகுதியாகிய யாழ்ப்பாணத்தை ஆண்டிருந்த பல செங்குந்த தலைவர்கள் அடைந்து, "முன் ஒரு கவியாழ்ப்பாடி இலங்கை அரசனிடம் பரிசாகப்பெற்று ஆண்டபடியால் யாழ்ப்பாணம் எனக் காரணப்பெயர் பெற்ற அந்நாட்டை ஆளுவதற்கு உமது குமாரருள் ஒருவனை நம்முடன் அனுப்பிவைக்கவேண்டும்" என்று கேட்டுக் கொண்டனர். அக்கேள்விக் கரசன் உடன்பட்டானுயினும், அன்னோருடன் தனது குமாரனைத் தனிமையாய் அனுப்ப மனமிலனாய்த் தங்களுக்குப் பண்டைக்காலந்தொட்டுச் சம்பந்திகளாகியும் போராற்றற் பெருந்துணைவராயுமுள்ள அடக்கம் முதலிய புண்ணியச் செயல்களைக் கைப்பற்றிவரும் காஞ்சிமாவடித் தேவசிம்மாசனத்தாராகிய தொண்டநாட்டுச் செங்குந்த மன்னருள் சிலரை வருவித்துக் குமாரருள் ஒருவனை வருவித்து அவனைத் தனதருகில் இருத்தித் தகுந்த புத்திமதிகளையும் இராச நீதிகளையுஞ் சொல்லி மகிழ்வித்துத் தனது மந்திரியின் குமாரனையும் வருவித்து மாவடியாராகிய செங்குந்தரைப் பார்த்துப் பின் வருமாறு கூறுவானுயினன் :—

"ஓ என் திருக்கண்மணிபோன்ற கைக்கோள குலதிலகரே, நீவிர் இங்கு வந்திருக்கும் ஈழநாட்டுச் செங்குந்தர்களுடனு மெனது இராச குமாரன் மந்திரிகுமாரனுகிய இவ்விருவருடனும் ஈழஞ்சென்று அங்குள்ள குடிகளுக்கோர் இடையூறு மின்றிப் பாதுகாத்து வருவீர்களாக" வென்றனுமதி அளித்தனன். இவ்வாறனுமதிபெற்ற இராச குமாரனும் மற்றைய பிரபுக்களுந் தங்கள் உறவினர் பலருடனுந் தமதடிமைகளுடனுங் கப்பலேறி யாழ்ப்பாணம் வந்திறங்கினர். அவர்கள் வந்திறங்கிய துறை பெண்ணைத்துறையாகும். (பெண்ணைத்துறையென வந்தன காரணம் மாசி மாதத்து வெளியீடு 44-ம் பக்கம் பார்க்க).

இவ்வாறு வந்திறங்கினோர் யாழ்ப்பாணத்துத் தலை நகரமென வழங்கிய நல்லூரையடைந்து அங்குத்தானே இராசகுமாரனுக்குப் பட்டங் கட்டினர். அவ்வரசனை யன்றுதொட்டு இன்றுவரையுங் காரணப் பெயராய்க் கூழங்கைச் சக்கரவர்த்தியென்றே சொல்லி வருகின்றனர். இராச குமாரனுடன் வந்த தொண்டநாட்டுச் செங்குந்தரும் மற்றைய வகுப்பினருந் தமதடிமைகளோடுங் கோட்டைக் கணித்தாகவே குடியேறினர். இவருள் மாவடியார் குடிகொண்ட விடத்தை இன்னும் மாவடியார் வளவென்றே உறுதி முதலிய் சாதனங்களி லெழுதப்பட்டு வருகின்றது. அங்கிருந்து இங்கு வந்து குடிகொண்ட தேவ சிம்மாசனாதிபதிகளாகிய மாவடியார் பெயர் பலவாயினு மவருள் விநாயகமுதலியாரே சகல வைபவங்களினுஞ் சிறந்தோராகையால் அவரது பிரபவம் விளங்க அவர் சந்ததியார் இன்றைக்கும் அவர்கள் பாட்டுக்குப் பட்டிக்குறியாக வி. குறியையே சுட்டு வருகின்றனர்.

இவையன்றி, அன்று வந்தோர் பெயரையே இன்றுந் தலைமுறை மாறுமல் மாவடியென்னுங் காரண விடுகுறிச் சொல்லை முன்னிட்டே மாவடி வெற்றிவேலுமுதலியார், மாவடி நாகப்ப முதலியார், மாவடி சுப்பையாமுதலியார் மாவடி ஆறுமுக முதலியார், மாவடி இராமலிங்க முதலியார், மாவடி விநாயக தேசிகர், மாவடி விசுவநாத முதலியார் எனப்பல பெயருண்டு. இவர்களுக்கு இராசசன்மான மிருந்ததற்குச் சாட்சியாக இராசகோன் என்னும் பெயரீண்டும் வழங்கிவருகின்றது.

இவர்கள் சோழன், பாண்டியன், சேரன் முதலிய அரசர்களுக்குப் போராற்றற்பெருந்துணைவராக விருந்தமைக்குச் சான்ருக கம்பரும், கற்றோரை யாதரிப்பவரும், தொண்டநாட்டையாள்பவரும், கொலைத் தொழிலைச் செய்யுங் குந்தத்தைக் கைக்கொண்ட கைக்கோளரே யென்பது போதர

வெற்றிபுனை தாதகிக்கும் வேம்புக்கும் பெண்ணைக்
சுற்றமெ பெருநிழலாய்த் தோன்றுமே—சற்றோர் [கும்
துறந்தாங்கு தொண்டை செழுநாடு தாங்கும்
மறந்தாங்கரத்த வரசு. எனப் பாடியுள்ளார்.

இவ்வாருக, இக்கம்பரது பாட்டிற்பிரியமுற்ற மாவடியாராகிய கைக்கோள குலதிலகருளொருவர் கம்பரை நோக்கி அகப்பொருட்டுறையொன்றில் சோழராசனைப் பாட்டுடைத் தலைவனுக்கி இத்தொண்டநாட்டினரைச் சிறப்பித்துப்பாடு மென்றனர். அதற்கவர்.—

> கையும்படியே நாங்கொற்ற
> நங்கோன் சென்னிரவைமீதே
> யையம்பெறு தண்ணடை
> மடவாய் அகிலின் தூபம்முகிலன்று
> பெய்யுந்துளியோ மழையன்று
> பிரசத்துளியே பிழையாது
> வையம்பெறினும் பொய்யுரைக்க
> மாட்டார் தொண்ட நாட்டாரே.

என்று ஒரு கவி கார்காலங்கண்டு மயங்கிய தலைவிக்குத் தோழிகூறியதாகவெடுத்துத் தொண்ட





நாட்டினராகிய கைக்கோளரைச் சிறப்பித்துப் பாடி முடித்தனர்.

கம்பர் பாட்டிவ்வாருக, குலோத்துங்கச் சோழனுக்குப் புகழேந்திப்புலவர் ஒட்டக்கூத்தரால் தமக்கு வந்த அவமானத்தைவிட்டு இன்னுமவர்மீது மவர் மரபினர்மீது மழுக்காறு வைத்திருக்கின்றனரோ அல்லவோ வென்பதைச் சோதித்துப் பார்க்க வேண்டுமெனத் தோன்றிய வெண்ணத்தினுல் ஒருநாள் புகழேந்தியைத் தனியே யழைத்துக்கொண்டு பொன்னியாற்றங்கரையோரமாகவே வருகிறுன்

அவ்வழியே சில காருகக்கைக்கோளர் சிப்பஞ் சிப்பமாகக் கட்டப்பட்டுள்ள பஞ்சுநூன் மூட்டைகளையுங் கல்விநூன் மூட்டைகளையு மெடுத்துக்கொண்டு கஷ்டத்துடன் செல்வதையும், சில வந்தணர் தேகசுகியோ டுண்டுடுத்துச் சந்தன புட்பவலங்கிருதராய்க் களிப்புடன் செல்வதையுங் கண்டான். உடனே தனதருகில் வரும் புகழேந்திப் புலவரைநோக்கி 'ஐயா புலவரே! அந்தணர் களிப்புடன் செல்வதையுங் கைக்கோளரவ்வளவு சிறப்பின்றிச் செல்வதையுங் கண்டீரா' வென்றனன். அதுகேட்ட புகழேந்திப் புலவர் அக் கைக்கோளரது கல்வியறிவொழுக்கங்களை யவ்வரசனுக்கு அறிவிக்க வெண்ணினவராய் உடனே அவரது கோலத்தை மாற்றி வறியர் வேடந்தரித்துத் தாமுமவ்வாறேயாகி யடுத்த கிராமத்துள்ளே நுழைந்து பிரமபரம்பரையாகிய நால்வருணத்தோரதில்லின் கண் சென்று உணவுண்டாவென்று வினவினர். அதற்கு அவர்களுள் ஒருவராவது உணவு படைத்தவர்களில்லை. அப்பாற் புகழேந்தி சோழனை யழைத்துக்கொண்டு சிவபரம்பரையினராயுள்ள முத்திறைக் கைக்கோளர் வசிக்குமிடத்தினை நோக்கிச் சென்றனர்.

அவ்விடத்திற் றந்துவாய்க் கைக்கோளராகிய அபிடேகத்தர் தமது புத்திரமித்திரர்களோடும் வேதமோதுதல் முதலிய வறுதொழிலில் அமர்ந்திருக்கக்கண்டு, இவர்கள் கருமங்களுக்கு இடையூருக நாம் போதல் தகுதியல்லவெனவெண்ணி யரசனோடு மற்றொருபுறஞ் சென்ருர். அங்குச் செங்குந்த கைக்கோளர்கள் தங்கள் புத்திரரோடும் மல்வித்தை, வில்வித்தை, வாட்போர், தோட்போர் முதலியவைகளைச் செவ்வனே நடாத்திக்கொண்டிருத்தலைக் கண்டு, இங்குந் தாமதித்து நிற்றல் கூடாதென வேந்தனை யழைத்துக்கொண்டு வேறோர் புறஞ் சென்றனர். இவ்விடத்திற் காருகக் கைகோளராகிய முதலிமார்கள் தமது புத்திரருடன் நெய்தலும் விற்றலுமாயிருக்கலோடு, சிலர் நெய்வித்தும் விற்பித்துங் கொண்டிருத்தலைக் கண்டு, அவருள் கந்தப்பமுதலியார் வீட்டிற் போய் 'உம்மிடத்திற் சாப்பாடுண்டா'வென்று வினவினர். அதற்கம் முதலியார் சாகச்செய்யுந்தன்மை யெங்கள் கைப்படையாகிய வீட்டிக்குண்டு. எக்காலத்து மெங்கள் வீட்டில் மேலான அறுசுவை யுணவு விசேடித்திருக்கும் ஓ நாவலரே! இன்றைக் கெமது வீட்டிலிருந்து பசியாற வுண்டுடுத்துப் போவீர் என்னுங் கருத்தை யமைத்து,

> சாப்பாடு குத்தக்குச் சந்தமு மெம்மில்லின்
> மீப்பாடா முண்டு மிருந்நாளைப்பாடு
> கொண்டீரிருந்து மிகுங்குக்கிப் பசியாற
> வுண்டேகுமினீர் உடுத்து.

என்னுமோர் வெண்பாவால் விடையளித்தனர். அதுகேட்ட புலவர் மிகமகிழ்ந்து நாம் முதலிலேற்றுப் பின்னரவர்தர விசையுங்கால் அதுபெறுது செல்லின் நம்பால் சந்தேக நிகழுமென்னுங் கருத்தினராய் உடனே யரசனுந் தாமுமாக அவ்வீட்டிற் றங்கிப் பாயாசம் முதலியவைகளோடுண்டு தாம்பூலம் முதலியவைகளைக் கைக்கொண்டு, வேதம் முதலிய நூல்களை வாசித்தாலு மிவ்வுலகத்திற் சொல்லுகின்றவருணத்தார் எல்லோருடைய தொழிலைச் செய்தாலும் வேலாயுதத்தை ஏந்திய வுங்கள் முருகக்கடவுளாற் குட்டிச்சிறைப்படுத்தப்பட்ட பிரம சிருட்டியாயிருத்தலொன்றே அம்மறையவர்க்குப் பழிப்பை விளைக்கும். ஆகலால் மறையவருமுமது மரபை நிகரார் என்னுங் கருத்தை யமைத்து,

> நூலாய்ந்திடினுந் நுவலின்மை வெல்லோர் தம்
> பாலேய்ந்த செய்கை படைக்கினும்—வேலேய்ந்த
> நுங்கந்த னாற்பட்ட கொய்பிரமனேற்ற லொன்றே
> பங்கென்பர் பார்ப்பாரகத்து.

என்னுமோர் வெண்பாப்பாடி விடைபெற்று மீண்டனர். அவ்வாறு மீண்டுவருகையிலப்போதவ்வரசனுக்கு விக்கல் தோன்றிப் புகழேந்தியைச் சிறிது சலந்தேடு மென்றனன். அதுகேட்ட புலவர் மற்றொரு கைக்கோளர் வீட்டிற்றலைவாசலி னின்று சலமுண்டாவென்று கேட்டனர். அது சமையந்தங்ஙன மிருந்த அருணகிரி முதலியாரென்பவர் 'எமது கைப்படையாகிய வேலுக்கே சலமுண்டு, தாங்கள் நிற்குமெ மதுமனைக்கண் நீங்கள் தாகந்தீரக் குடிப்பதற்குப் பாலும் பழமுமுண்டு. அடி

யேன் சொல்லும் இப் பாட்டின் பொருளை யுணர்வீரேல் அவற்றை மனமகிழ்வுடன் தருவேன்' என்னுங் கருத்தையுள்ளடக்கி,

சலமுண்டு குந்தத்திற் றங்குமெம் மில்லிற்
பலமுண்டு நீரருந்தப் பாலும் – வலமாம்
பொருள்காட்டு வீரேற் புகழுமக்கிப்போ
து நாட்டு வேனே யுகந்து.

என்னுமோர் வெண்பாவால் விடையளித்தனர். அதுகேட்ட புலவர் வியந்து அப்பாடலுக்குத் தாவாகக் 'கைவேலைங் கரத்திற்றாங்கும் கைக்கோளகுலதிலகரே! சிருட்டி முதலிய முத்தொழிலை நடாத்து மத்தலைவர்களும் உமது மரபினரை நிகரார்' என்பது முதலிய கருத்தை யுள்ளடக்கி

குந்தத்தைக் கைக்கொண்ட
கொற்றவரே கோவாற்று
சொர்த்தத்தைக் கைக்கொண்
முத்தாணிகரு—மத்தவும்பர்
தெவ்வழித்தலிகையுமே
சேர்க்கிருத்தலாலு மக்கிங்
கெவ்விதத்திலொப்பாவரே.

என வொரு வெண்பாப்பாடினர். அதுகேட்டவம்முதலியார் மகிழ்ந்து அவ்விருவருக்குந் தாகந் தணியப் பாலும் பழமும் கொடுத்து மிக மரியாதை செய்ய வாசனும் புலவரும் மகிழ்வோடும் அவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தமதரண்மனை வந்து சேர்ந்தார்கள்.

இவ்வாறு பல வரசர்களாலும் பல வித்துவான்களாலும் புகழ்ந்து பாடப்பட்டுள்ள தொண்ட நாட்டுச் செங்குந்தர்களாகிய மாவடியார் முதலிய நமது கைக்கோளர்கள் யாழ்ப்பாணம் வந்து குடிகொண்ட நாளில் எவ்வளவோ சிறப்புற்றிருந்தனர் என்பது நாம் அவர்கள் செய்துள்ள பல நன்மைகளினாலும் எழுதிவைத்துள்ள வட்டுப்பிரதிகளினாலுந் தெரியவருகிறது. தற்போதவர்கள் கல்விக் குறைவால் தங்கள் பெருமையைத் தாங்களே யறிந்திலர். இதனாலன்றோ நம்மை மற்றைய வகுப்பினர் குறைவாகப் பேச நேர்ந்தது ஆயினும்—

சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்துங்
கந்தங்குறை படா தாதலாற்—றந்தம்
தனஞ்சிறிய ராயினுந் தார்வேந்தர் கெட்டால்
மனஞ்சிறிய ராவரோ மற்று.—

என்ற எம்மன்னையின் வாக்கின்படி யிப்போது கைக்கோளராகிய நம்மவர்கள் இராச சன்மானத்திற் குறைந்தவர்களாயினும், ஏனைய வகுப்பினரினும் எவ்விதத்தினுந் தாழ்ந்தோரல்லரெனவே வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் இன்றைக்கும் யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமிகோயில் முதலிய சிறந்த வாலயங்களில் கொடியேற்ற உற்சாவாரம்பத்தன்று மானேசரால் அனுப்பப்படுகிற மேளவாத்திய கோஷ்டத்துடன் இவர் தம்மனையினின்றுங் கொடிச் சீலையை யெடுத்துத் தேரில் வைத்திழுத்துக் கொண்டு போய்க் கொடுத்துக் கொடியேற்றுந் தனையு நின்று, சாமி தரிசனை செய்துகொண்டு, குருக்களாற் கொடுக்கப்படுங் காளாஞ்சி முதலிய சன்மானங்களைப் பெற்றுத் திரும்பித் தேரையு மிழுத்துக் கொண்டு,தங்கள் வீடுவந்து சேருவர். இக்காரணத்தாற் றேரோடுஞ் செங்குந்தர் வீதி யென வழங்கி வருகின்றது.

இஃதிங்ஙனமிருக்க, மாவடியார் வழிவந்தோரிற் சிலர், தங்கள் சாதித்தொழிலாகிய நெசவுத் தொழிலைக் கையாண்டு, அதினின்றும் வெகு பொருளைச் சம்பாதித்து, அத்தொழிற்கின்றியமையாக் கருவியாகிய பரித்திறான் முதலியவற்றைத் தமது தாய் நாடாகிய இந்தியாவினின்றும் வருவிப்பதற்காகத் தமது சொந்தத்தில் எழுவத்தைகளை வைத்தாண்டு, அவற்றை பாவிப்பதற்குஞ் செலுத்துவதற்கும் உரியராகிய கரையாருள் சிலரை இந்தியாவினின்றும் வருவித்து அவரைத் தமதூர்ப் புறத்திற் குடியிருத்தி வந்தனர். இச்கரையாரோடு எழுவத்தையையும் வைத்தாண்ட காரணத்தால் அன்னோரை இன்றைக்கும் எழுவத்தை யாரென்றும், அவர்கள் வசிக்குந் தெருவை யரசடித் தெருவென்றும், அவர்களை யரசடியா ரென்றுஞ் சொல்லப்படுகிறது, இக்கைக்கோளர் சிறப்பை ஈண்டு கூறப்புகின் விரியுமென்று விடுத்தோம். இவ்விஷயம் கர்ன பரம்பரையிலும் வட்டுப்பிரதிகளிலுங் கேட்டுங் கண்டுமுள்ளபடி எழுதப்பட்டது.

மாவடி வி. தழந்தைவேல் முதலியார்.
யாழ்ப்பாணம் திருநெல்வேலி.



# திவ்விய க்ஷேத்திரங்கள்

## 1. பழநிப்பதி.

தென்னிந்தியாவில் பழநி நகரத்தைப் பற்றியும் ஆங்கெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீபழநியாண்டவரைப் பற்றியும் கேள்விப் படாதவர் ஒருவருமில்லை யென்றே சொல்லலாம். புராதனமாகச் செங்குந்தர்கள் வதியும் முக்கியமான நகரங்களுள் பழநிப்பதியுமொன்று. இது மதுரை ஜில்லாவைச் சார்ந்தது.

இந்நகரம் திண்டுக்கல்லிலிருந்து சுமார் 36 மைல் தூரத்திலுள்ளது. திண்டுக்கல்லி லிருந்து இப்பதியின் வழியாய்ப் பொள்ளாச்சி முதலிய இடங்களுக்குப் புதிதாய் இருப்புப் பாதை போடப்பட்டு 6-11-28 முதல் வண்டி செல்கின்றது. பஸ் மூலமாகவும் பழநிக்குச் செல்லலாம்.

இந்நகரில் முனிசிபாலிடி என்னும் நகரபரிபாலன சபையு முண்டு. இப்புண்ணிய க்ஷேத்திரம் மலையடிவாரமென்றும், பழநி நகரென்றும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப் பெற்றிருக்கிறது. ஒரு அழகான சிறு குன்றின்மேல் ஸ்ரீபழநியாண்டவர் கோயில் அமைந்துள்ளது. இக்குன்றே பழநி மலை. இதனடியே மேற்கூறிய மலையடிவாரம். இது திண்டுக்கல்லிலிருந்து வரும் பாதைக்குத் தெற்கே யிருக்கிறது.

அடிவாரத்திலுள்ள கட்டடங்கள் யாவும் சுவாமி தரிசனத்திற்கு வரும் அன்பர்கள் சௌகரியமாய்த் தங்கியிருப்பதற்கெனவே கட்டப்பட்ட தரும மடங்களேயாம். யாத்திரைவாசிகள் தங்கியிருப்பதற்கும், சுவாமி தரிசனஞ் செய்வதற்கும் இதுவே வசதியான இடம். ஆயினும் வேனிற்காலத்தில் ஈண்டு ஜல வசதி யிருப்பதாகச் சொல்ல முடியாது என்றாலும், பொதுவில் தேகாரோக்கியமானதென்றே சொல்லலாம். யாத்திரை வாசிகளுக்குவேண்டிய உணவுப்பொருள்களும் அபிஷேகத்திற்கு வேண்டிய சாமான்களும் இவ்விடத்திலேயேகிடைக்கின்றன. அடிவாரத்தெரு வெனப்படும் பிரதான வீதியின் தென்கோடியில் ஸ்ரீபழநியாண்டவர் எழுந்தருளியுள்ள மலையும், வடகோடியில் ஸ்ரீசண்முகப் பெருமான் விருப்பத்தோடு எழுந்தருளியுள்ள ஆறுபடை வீடுகளுள் ஒன்றாகச் சொல்லப்படும் திருவாவினன்குடி க்ஷேத்திரமும் அமைந்திருக்கின்றன. ஆவினன்குடிகோயிலுக்கு கிழ்ப்புறத்திலுள்ளது சரவணப்பொய்கை. திருவாவினன்குடி மிகப் புராதனமான க்ஷேத்திரமாயிருப்பினும் மலைமேலெழுந்தருளியுள்ள ஸ்ரீபழநியாண்டவருக்குள்ள செல்வாக்கும் விமரிசையும் இதற்கில்லையென்றே சொல்ல வேண்டும். இக்கோயில் சமீபத்தில் ஒரு நாட்டுக்கோட்டைச் செட்டியாரால் புதுப்பிக்கப்பெற்றிருக்கிறது.

மலைப்பிரதக்ஷணம் செய்தல், அம் மலையின் மேல் எழுந்தருளியுள்ள ஆண்டவரது அருள் பெறுதல் போலவே மிகச் சுலபமானது. ஸ்ரீ பழநியாண்டவர் ஆரோகணிப்பதும் ஒருமயில்; அவரது மலையின் சுற்றளவும் ஒரு மைல். மலைமேல் கோயிலுக்குச் செல்லும் வழி வளைந்து வளைந்து செல்லுதலால் அதை ஒரு பாம்பின் உடலாகவும், உச்சியிலுள்ள கோயிலையும் பிராகாரங்களையும் அப்பாம்பின் படமாகவும், அங்கெழுந்தருளியுள்ள ஸ்ரீமுருகக்கடவுளை நாகரத்தினமாகவும் வர்ணிக்கலாம்.

ஆண்டவர் கோயிலை நோக்கி மலை ஏறுவோர் ஆராதனையாதிகளுக்கு வேண்டியவற்றைக் கொண்டு போவதோடு, வழியிலும் கோயிலைச் சூழ்ந்து மலிந்து கிடக்கும் குரங்கினங்களுக்கு இரைக்கும் பொருட்டுப் பழம், கடலை, பொரி முதலிய தின்பண்டங்களும் கொண்டு போதல் வேண்டும். இல்லையேல் சதா மனிதர்களோடு பழகி வருகிறபடியால் வானரங்கள் பயமின்றிச் சில சமயங்களில் வழிமறித்துக்கையிலுள்ளவற்றைப் பிடுங்கிக் கொள்ளுகின்றன.

அடியார்கள் மலைமேல் கோயிலைச் சிரமமின்றி அடைவதற்குப் படிகள் சௌகரியமாக அமைக்கப் பெற்றிருக்கின்றன. வழியில் வையாபுரி கோயிலும், இடும்பன், குழந்தை வேலப்பர் முதலிய கோயில்களும், அநேக விநாயகர் கோயில்களும் உள்ளன. விடியற்கால முதல் இரவு சுமார் ஒன்பது அல்லது பத்து மணி வரையில் ஜனங்கள் கோயிலுக்குப் போய்க் கொண்டே யிருக்கின்றார்கள். ஒவ்வொரு

நாளும் அநேக காவடிகள் கொண்டு வரப்பெறுகின்றன. கோயிலின் உட்பிரகாரத்திற்கு ஈசான்யமூலையில் நவவீரர் கோயிலுள்ளது.

பழநியாண்டவர் தம்மையடுத்த யாவர்க்கும் எளிதில் அருள்பாலிக்கிறார் என்பது அவரை நோக்கிச் செல்லும் யாவர்க்கும் எளிதில் தரும் தரிசனத்தினாலேயே நன்கு விளங்கும். ஆண்டவரது உருவம் கண்டோர் மனதைக் கவர்ந்து அன்புமயமாக்கு மென்பதிற் சந்தேகமில்லை. ஏறக்குறைய நாள் முழுதும் தேன், பஞ்சாமிர்தம் முதலிய அபிஷேகங்கள் நடந்துகொண்டேயிருக்கின்றன. சந்நிதானத்திற்குப் பின் புறத்தில் சந்தனக்குழம்பை வீசி ஸ்ரீமுருகப்பெருமானை 'பழநி பாவா' என்னும் பெயரால் மகம்மதியர் வணங்குகின்றனர். ஸ்ரீ அருணகிரிநாதஸ்வாமிகள் கந்தரலங்காரத்தில் சில பாக்களில் 'ராவுத்தனே' எனப்பாடியிருப்பதை ஆதாரமாகக் காட்டி, ராவுத்தர்களாகிய தாங்களும் வணங்குதற்கு உரிமை உண்டு என்கின்றனர். இக்கடவுள்மீது அநேக மகம்மதியர்களும் பாமாலைகள் செய்திருப்பதாகவும் தெரிகிறது.

இங்கு சிறுமலைப்பழம், தேன் முதலியவற்றால் தயாரிக்கப்பெறும் பஞ்சாமிர்தம் மிகவும் அருமையானது.

பழநிமலைக்குத் தெற்கே சுமார் அரை மைல் தூரத்தில் சண்முக நதியின் உபநதியாகிய ஒரு சிறு அருவியோடுகிறது. இது ஸ்நானம் செய்வதற்குத் தகுதியானது. அதற்கப்புறம் சுமார் நாலைந்து மைல் தூரத்திலுள்ள கொடைக்கானல் மலைகள் என்னும் உன்னதமான மலைப்பிரதேசம் பார்க்கத்தகுந்தது. இம்மலைப்பிரதேசங்களின் மேல் அநேக கிராமங்களும், வேனிற்காலத்தில் ஐரோப்பியர்களும், செல்வந்தர்களும், தேகாரோக்கியத்தின் பொருட்டுச் செல்லும் கொடைக்கானல் என்னும் ஆரோக்கிய நகரமும், தேயிலை, வெள்ளைப்பூண்டு முதலியவை விளையும் அநேகவிஸ்தாரமான தோட்டங்களும் இருக்கின்றன. பழநிப்பதிக்கும் கொடைக்கானல் நகரத்திற்கும் சுமார் 2) மைல் தூரமிருக்கும். இங்கு மலையாளம், நீலகிரியைப் போல் வேனிற் காலத்திலும் மழை பெய்து கொண்டிருக்கும்.

அடிவாரத்திற்கு வாயுமூலை (வடமேற்கு)யில் சுமார் ஒரு மைல் தூரத்தில் இருக்கிறது பழநி நகரம். அடிவாரத்திற்கும் பழநி நகரத்திற்கும் மத்தியில் வையாபுரி தீர்த்தமென்னும் ஒரு ஏரி யிருக்கிறது. பட்டணத்திற்கு மேற்கே சுமார் ஒரு மைல் தூரத்தில் சண்முக நதி ஓடுகிறது. யாத்திரா வாசிகள் பெரும்பாலும் காலையில் ஸ்நானம் செய்ய இந்நதிக்குச் செல்லுகின்றனர். பட்டணத்திலுள்ள பெரியநாயகியம்மன் கோயிலிற்றான் ஸ்ரீபழநியாண்டவர் தேவஸ்தான ஆபீஸ், உற்சவ மூர்த்தங்கள், ஆடையாபரணங்கள் முதலிய யாவுமிருக்கின்றன. இவ்வூரின் மேற்குப் பாகத்தில் செங்குந்தர்கள் வசிக்கிறார்கள். இவர்கள் பெரும்பாலும் கல்வியிலும், பொருளாதாரத்திலும், மிகவும் பிற்போக்கடைந்தவர்களென்றே சொல்ல வேண்டும். ஆயினும் இந்நகரில் நம்முன்னோர்கள் ஏற்படுத்தியுள்ள பல தர்மங்களையும் ஒருவாறு பரிபாலித்து வரும் இவர்களது பெருநோக்கமும், குலாபிமானமும் போற்றத்தக்கன.

ம. அ. கனகசபை முதலியார்.

## மாதர் பகுதி

### சீர்சால் மகளிர்.

(தொகுதி 2-ஙாககும் பக்கத் தொடர்ச்சி)

இங்ஙனம் ஐம்பொறி வழிச்செல்லும் மனதை யடக்கல் அருமையாகவும், இக்காலத்து பெண்கள் நாடகங்களுக்கும், சினிமாக்களுக்குங் கூட்டம் கூட்டமாகத் தங்களிடமில்லாவிடினும் இரவல் நகைகளையுஞ் சேலைகளையுமாவது கொண்டலங்கரித்துக் கொண்டு செல்வது எவ்வளவு சீர்கேடான தொழில். அந்தோ! இவர்கள் அங்ஙனஞ்சென்று அங்கு காணுங் காட்சிதானென்னே! காதலி! சங்கணிந்தகம்,வியபிசாரம் விரிந்ததும் ஆகியகாட்சிகளேயன்றோ! இன்னொரு பெரிய காட்சியென்னவெனில் நாடக நடிகர்கள் நடிக்கும் முறையே! அவர்கள் நடிக்க எடுத்துக்கொள்ளும் நாடகமே! சினிமாக்களிற் காணுஞ் சித்திரங்களின் வேடிக்கையே! நாடகக் காட்சியின் பயனாக எத்தனையோ ஆடவரும் பெண்டிரும் நிறைகெட்டுத் தீயவழியிற் புகுந்துள்ளனர் என்பதை நேயர்கள் நினைக்க. சில நாடகங்கள் நன்முறையாக நடத்தப்படுகின்றன. அவைகளைப்பற்றி யாவருங் குறைகூறார். நாடகங்கள் மக்களை நல்வழிப்படுத்தவும், காலட்போக்குக்காகவும் முன்னோர் இயற்றினரேயன்றி யிங்ஙனந் தீய வழியிற் புகுத்தப்படவேண்டுமென்று இயற்றினாரில்லை. ஆனால், இக்காலத்திலோ பெரும் பகுதியுந் தீயனவையே பயக்கின்றன என்பதை யாவரும் மறுக்கவியலார். குலப்பெண்கள் இத்தகைய காட்சிகட்குச் செல்லல் பெருந்தவறு; அதனிலுந்தவறு தங்களை யலங்கரித்தேகலே.

இனிக் கோயிலுக்குச் செல்லல் நன்றா? தீதா? என்பதைச் சிறிது ஆராயவேண்டுவது இன்றியமையாதது. கோயில் மக்களின் மனஒருமைக்கு ஏற்பட்டதேயன்றி வேறெதற்கும் ஏற்பட்டதாகவும், ஏற்படவேண்டிய அவசியமென்பதும் எண்ண இடமில்லை. கடவுள் எங்கும் நிறைந்தவர். 'அவனசையாமல் அணுவும்அசையாது' என்னுந் தத்துவப் பொருளை நன்கு ஆராய்ந்தால் கடவுளே யாவுமாயிருக்கிறார் என்பது வெளிப்படை.

“ வானே நிலனே கனலே மறிபுனலே
ஊனே அவ்வூனில் உயிரே உயிர்த்துணையே
ஆனேறும் ஏறே அரசே அருட்கடலே
தேனே அமுதே அளியோங்கள் செல்வமே”.

என்னும் பெரியோர் வாக்கை யுய்த்துணர்க. ஆகவே, கோயிலில் மட்டுங் கடவுளிருக்கிறார் எனக்கோடல் பொருத்தமில்லை. நம்மைப் படைத்த, நமக்குச் சிறந்தமக்கட் பிறவியளித்த கடவுளை வணங்க ஓர்காலம் வேண்டும், அக்காலத்து மனந்தூயதாதல் வேண்டும் என்னும் எண்ணம் நமது முன்னோர் பால் உதிக்க, அவர்கள் தத்தம் வீடுகளிலிருந்து கடவுளைத் துதித்தால், வீட்டிலுள்ள தொடர்புகள் மனதை யொருமைப்படுத்தத் தடையாயுள்ளன வாதலான், ஓரிடம் (கோயில்) இயற்றிக் காலமும் விதித்தனர்; புறக்கண்ணுற் காணவியலாப் புங்கவற்கு வடிவமும் புனைந்தனர். ஆகவே, நாம் கோயிலுக்குச் செல்வது மனதை யொருமைப்படுத்திக் கடவுளை வணங்கவே யாகும்.

கடவுளுக்குப் பொற்பணி பூண்டாரும் பட்டாடையுடுத்தாரும் உயர்ந்தவர்; மற்றையவர் தாழ்ந்தவரென்னும் எண்ணமில்லை. புறத்தழகு கொண்டு கோயிலுக்குச் சென்று புங்கவனைத் தொழவேண்டும் என்னும் பொருத்தமில்லை. அகத்தழகு கொண்டோரும் ஆருயிர்க்கன்பு பூண்டாருமே அரனைத்தொழ அமைந்தவர். அகத்தழகு கொள்ளவும் ஆருயிர்க்கன்பு பூணவுந் தக்க தன்மை வரவே ஆலயஞ்செல்கிறோம். புறத்தழகு கொண்டால் அகத்தழகு தானே வருமென்பது புன்மை. புறத்தழகு அகத்தழகை யழிக்கும் பொருளது; அளிக்கும் பொருளதன்று. இங்ஙனமிருக்க நாம் கோயிலுக்குச் சென்றால் அங்குக் காண்பனவெவை; ஆடவரும் பெண்டிரும் அணியணியாக அலங்கரித்துக்கொண்டு பொது மகளிருக்குங் குலமகளிருக்கும் வேறுபாடு தோன்றாவண்ணஞ் செல்லுங் காட்சியே! மனமுருகக் கடவுளை வாழ்த்துவாரில்லை! மங்கையரை மைந்தரும் மைந்தரை மங்கையரும் மனங்குழைந்து காண்கின்றனர். எனவே கோயிலுக்குச் செல்லல் பெருந்தவறென என்னும் நிலைமை வந்துவிட்டது. திருவிழாவைக் குறித்தெழுதின் பெருவிழாவாக முடியுமாதலால் அதைப்பற்றி யீண்டெழுத மனமெழவில்லை.

பலகூறியென்? பெண்டிராயினுஞ்சரி, ஆடவராயினுஞ்சரி, கோயிலுக்குச் செல்லல் இக்காலத்து முறையிற் பொருத்தமன்று. மனந்தூயராக வேண்டும்படி கோயிலுக்குச் செல்லவிரும்புவோர் புறத்தழகை மிகையாக்கிக் கொள்ளாமலகத்தழகை யணிந்து செல்லல் சாலச் சிறந்ததாம். முற்காலத்துப் பெண்டிர்கள் கோயிலுக்குச் செல்லலே பெருந்தவறென நினைத்திருந்தமை முற்கூறினேன். இக்காலத்து முறைப்படி, அல்லது நடுநிலைப்படி பெண்டிர்கள் கோயிலுக்குச் செல்ல விதிபெற்றவர்களாகையால், மனதை யொருமைப் படுத்திக்கொண்டு, தூய ஆடையணிந்து, தத்தங்கணவருடனேயாவது பெரியோர்களுடனேயாவது சென்று வணங்கலாம்.

நிற்க, இக்காலத்துச் சில பெண்கள் மேற்கு நாட்டுப் பெண்களைப்போற் கண்ட இடங்களிற் செல்லவும், பிற ஆடவருடன் பழகவும், ஆடையணிந்து கொள்ளவும் விரும்புகின்றனர். மேற்கு நாட்டினா இவ்வொழுக்கத்தைக் கைக்கொண்டிருப்பதால் அடையுந் தீமைகளை யடிக்கடி கேள்விப்படுகிறோம். வியபிசாரம் மேற்குநாட்டில் உள்ள தன்மையைப்போல் வேறெந்த நாட்டி

னும் இல்லை. மேற்கு நாட்டினருக்கு இவை பொருத்தமுள்ள ஒழுக்கங்களாகத் தோற்ற லாம். அவர்கள் ஆடவரும் பெண்டிருமாகக் கூடிக் குடித்துவிட்டு நடிக்குஞ் சங்கங்களையு டையர்; இக்காலத்து அவர்கள் தத்தமக்கு விருப்பம் போனவாறு பிற புருடரும் பெண் டிருமாகப் பிணைத்துக் கைகோத்தாடுந் தன்மை யர்; இக்காலத்து அவர்களை யொருவருங் கண் டிக்க வியலாது. இக்களியாட்டத்தால் நிகழுங் கெடுதிகள் மிகப் பல ஆயினும், வர வர இந் தியராய நமது ஒழுக்கத்தையே கைக்கொள்ள விரும்பி வருகின்றனர். அத்தகைய மேல் நாட்டினரின் ஒழுக்கம் நமக்கு எத்தகைய பய னைச் செய்யுமென அறிவாளிகள் உணர்வர். ஆகையால், நமது சகோதரிகள் மேல் நாட்டின ரின் ஒழுக்கத்தை நிலைாக்கவே தகாதென்பது என்னுடைய எண்ணம். எனினும், வீட்டினி லேயே அடைபட்டு உடல் நலனையும் அறிவு நலனையும் இழந்து தவிக்க வேண்டுமென்பது என்னுடைய எண்ணமல்ல.

நமது சகோதரிகளிடத்தில் வீணுரையாடல் என்ற குற்றம் பரவியுள்ளது. ஆடவர்கள் வெளிச் சென்று பொருளீட்டி வரலும், பெண் டிர் வீட்டிலிருந்து உணவைப் பக்குவப்படுத்தி வைக்கவும், குழந்தைகளை வளர்த்து நலனுண் டாக்கி வரலும் நமது நாட்டில் நியமமாக ஏற் பட்டிருக்கிறபடியால், பெண்டிர்கள் வீட்டி லேயே யிருக்க நேர்ந்துள்ளது. ஆகவே, பெண் டிர்கள் தமது குடும்ப வேலை முற்றியவுடன், அயல்வீடு சென்றுவது, அயல் வீட்டுப் பெண் டிரைத் தமது வீட்டிற்கு வரும்படி செய்தா வது வீணுரையாட வேண்டி வருகிறது. இவ் வீணுரைகளில் நன்மை சிறிதும் உண்டாவ தில்லை. மற்றையவர்களைப் பற்றிய வழக்க ஒழுக்கங்களும், குற்றங்குறைகளுமே அவர் களின் பேச்சிற் கலந்துள்ள பெரும்பகுதிகள்.

இவைகளில் நன்மையில்லை யெனினுந் தீமையே வளர்ந்து வருமென்பதை யாவரும் உணர்வர். வள்ளுவனாரும்,

> ' பயனில் சொல் பாராட்டு வானை மகனெனல் மக்கட் பதடி யெனல் ''

எனக் கூறியிருக்கின்றனர். ஆடவராயினுஞ் சரி பெண்டிராயினுஞ்சரி பயனில் சொற்களைப் பண்படுத்திப் பயிராக்குவதனால் தீமையென் னும் பயனையே யடைவரென்பதில் யாதொரு ஐயமுமின்று.

கல்விப்பயிற்சியுடையவராயின் குடும்பவேலை கள் முடிந்தவுடன் நமது நாட்டுச் சம்பந்தமான வும், பிறநாட்டுச் சம்பந்தமானவும் ஆகிய சரித் திரங்களையும், தினசரிப் பத்திரிகைகளையும், மற் றைய பத்திரிகைகளையும், அறநூல், பொருள் நூல், உடனூல்களையும் படித்து அறிவை நல னுற வொளி செய்யலாம். கல்வியில்லாக்குறை யே யித்தொல்லையுளாழ்த்தியது.

மற்றும், வரவுக்கு மிகுதியாகச் செலவு செய் தலும், தங்கள் நிலையை யுணராமல் நகைகளை யும் உடைகளையும் வாங்கித்தரும்படி கணவரை வற்புறுத்தலும் சில பெண்களிடமுண்டு. இத னால், கடன் கொண்டு கெட்ட குடும்பங்கள் எண்ணிறந்தன. ஆடவர் கொண்டுவந்த பொரு ளைத் தக்கபடி செலவு செய்வது நம் நாட்டின் பெண்களுடைய கடமையேயாகும். பெண்கள் சிறப்படைய வேண்டுமாயின் இதுகாறுங் கூறிய முறைப்படி நடக்க வேண்டுமென்பதை அறி வாளிகள் யாவரும் உணர்வர். முருகன் பேர ருளால் யாவரும நன்னெறியறிந்து நடக்க.

ஐ. இராஜு முதலியார்,
தமிழாசிரியர்.



## மாணவர் பகுதி

### இரண்டு சிறுவர்கள்.

#### சப்ரோனியாவும் சாம்சனும்

இங்கிலாந்திற்கு மேற்கேயுள்ள ஒரு நாட்டில் ஒரு பிரபு செல்வம் மிக்க மேன்மைபெற்று வாழ்ந்து வந்தார். அவரும் அவர்தம் மனையாளும் மனமொத்து சகல போகங்களுடன் வாழ்ந்து வந்தார்களெனி னும் மக்கட்பேறுமட்டுமின்றி வெகு நாளாய் வாட்டமுற்றிருந்தனர். அத் தனிக்குறையும் நீங்கச் சில்லாண்டுகள் கடந்து அவருடைய இல் லாள் ஒரு அருமை மகனை யீன்றனள். வெகு நாள் ஆவலுடன் ஆசரித்திருந்து பிறந்த குழவி —அதனினும் ஆண் குழவி—ஆகலால், அம் மகனுக்குச் சாம்சனெனப் பெயரிட்டுச் சிறப்பு டன் அவனைச் சீராட்டிப் பாராட்டி வந்தனர்.

பெற்றோருக்கிருந்த பேராவலினால் அவர் கள் மைந்தனைத் ' தரையிலும் விடாது ' செல் வமாய் வளர்த்து வந்தனர்.

சாம்சனை ஆங்காங்கு விநோதக் காட்சிகளுக் கோ, சிறுவர்கள் விளையாடு மிடத்திற்கோ அழைத்துச் செல்ல வண்டியும், கால்நடை யாய்ச் செல்ல வேண்டிய இடத்திற்கு அவனைத் தூக்கிச்செல்ல ஆளும் இன்னும் பலவித ஊழி யங்களை செய்ய வேலையாட்களு மிருந்தனர். கேட்டதை யெல்லாம் தடையின்றித் தாராள மாய்ச் சாம்சனுக்கு அளித்தனர். மனம் கோ ணுவாறு அப்படிச் செல்வமாய் அவனை வளர்த் ததின் பயன் என்னவெனின், சிறுபிராயம் முதற் கொண்டே அவனுக்குப் பிடிவாத குணமும் மூர்க்கத்தனமும் மிஞ்சின. இன்னும் ஓடியாடி விளையாடினால் உடல்கருத்து மேனிகுன்று மென்று, அவனை வீட்டிலேயே அலங்கரித்து அடைத்து வைத்திருந்ததால், அவன் மிகவும் மெலிந்த உடலினனாய் அடிக்கடி நோய்வாய் விழுவான்.

இவ்விதமாகவே ஆறுபிராயம் வரையிலும் சாம்சனைச் செல்வமாயச் சீராட்டி வந்தார்கள். ஒருநாள் அவனை அவன் தாய் நீராட்டி நல் லுடையால் அலங்கரித்து நந்தவனத்தில் மலர் பரித்து வேடிக்கையாய் விளையாட வேலைக்காரி யுடன் அனுப்பினாள். பூந்தோட்டத்தில வேலை க்காரி தன் எஜமானியின் உத்தரவின்படியே ஈரமில்லா இடத்தில் அவனை இருத்திவிட்டுத் தான் மலர்களைக் கொய்து அவனிடம் குவித் தனள். அவனும் உட்கார்ந்த இடத்திலேயே மலர்களை வைத்துக்கொண்டு விளையாடினான். அவ்வனத்திலேயே மற்றும் சில பிள்ளைகள் விளையாடிக்கொண்டிருந்தனர். ஆனால் அவர் கள் திருடன் விளையாட்டு முதலிய தேக ஆரோக்கியத்திற்காதாரமான ஓடியாடும் விளை யாட்டுகளில் ஈடுபட்டிருந்தனர்.

ஒரு சர்ப்பமானது அந்நந்தவனத்தின் வழியே எங்கிருந்தோ ஊர்ந்து சென்றது. அது ஓடி விளையாடும் சிறுவர்களுக் கஞ்சி பதுங்கிச் சென்று, சுகமாக உடல்சாயாது மலர்களை அழகு பார்த்துக் கொண்டிருந்த சாம்சனிருக்கும் வழியே பயமற்று வந்தது. வேலைக்காரியோ பாம்பு ! பாம்பு ! என்று அலறினள்; சாம்சனோ உடல் வியர்க்க முகம் சிவக்க அழுதனன். அக் கூக்குரலைக் கேட்டுச் சிறுவனொருவன் ஓடிவந்து கைத்தடிகொண்டு அதை விரட்டினான். பாம் பும ஒருவரையும் தீண்ட இடமில்லாது தாச் சிறுவன கைத்தடிக் கஞ்சி ஓடி ஒளிந்தது. இதற்குள் அச்சிறுவனுடைய நண்பர் சிலர் வந்து சூழும்விட்டனர். ' பத்துப்பேர் நடுவில் அகப்பட்ட பாம்பு சாகாது ' என்றவாறு பலர் கூடியும அத்துஷ்ட ஜீவனைக் கொல்ல முடிய வில்லை. சாம்சனைப் போன்ற மற்ற சிறுவர் கள பாம்பை எதிர்த்துக் கொல்ல எத்தனித் திருக்கையில், அவன பாம்பைக்கண்ட பயமும் தெளியாது தன்னை வீட்டிற்குக் கொண்டுபோய் விடும்படி அழுதனன். வேலைக்காரியும் குழந் தையை அழைத்துக்கொண்டு வீடு சென்றனள். ஆனால போகிற பயத்திலும் அவசரத்திலும் சாமசன் தரித்திருந்த மேலாடையைத் தரையில மறந்து வைத்துவிட்டுச் சென்றனள்.

பாம்பை விரட்டிய சிறுவர்களில் ஒருவன் அதை ஒருவாறு விட்டுத் திரும்புகையில வழி யே ஒரு மேலாடை யிருக்கக் கண்டான். அச் சிறுவன மிகவும் நற்குண நற்செய்கைகள் வாய்ந்

தவனுகலால், அவ்வஸ்திரத்தை உரியவனிடம் சேர்ப்பிக்க வேண்டுமென்றெண்ணி, அதுதான் கண்ட இளஞ்சிறுவனுடையதாக இருத்தல் கூடுமென்றாகித்து, அவ்விளைஞனையும் தன் வீட்டிற்கு எதிர்வீட்டில் அடிக்கடி கண்டிருப்பதாக நினைத்து அவ்வாடையை எடுத்துக் கொண்டு சாம்சன் வீட்டிற்குச் சென்றனன். சாம்சனது தாயார் விலையுயர்ந்த பட்டாடையை இழந்ததற்காக வேலைக்காரிமீது கோபித்துக் கொண்டிருக்கையில், சிறுவன் அங்குத் தோன்றி "நந்தவனத்தில் இந்துணையைப் போட்டுவிட்டு வந்து விட்டீர்கள் போலிருக்கிறதே, இது உங்களுடையது தானோ?" என்று கேட்டு அதை அவர்களிடம் சேர்ப்பித்தனன்.

இதற்குள் சாம்சன் மெல்ல நடந்து வந்து "அம்மா, இந்தப் பையன்தான் பாம்பை அடித்து விரட்டினவனம்மா" என்று சொன்னான். அவ்வம்மைக்கு அதைக் கேட்டதும் மனமடைந்து அச்சிறுவனிடம் பரிவுண்டாயிற்று. ஆகவே அவனைத் தங்கள் வீட்டிலேயே தன் புதல்வனுக்குத் துணையாக வைத்துக்கொள்ளலாமென நினைத்து, "நீ, எங்கள் வீட்டிலேயே இருக்கிறாயாயப்பா" என்று அவ்வம்மை கேட்டனள். அதற்கு அச்சிறுவன் தன் தகப்பனார் உத்தரவின்றி வருவது கூடாதென்று விநயமாய்ச் செப்பினான்.

அச்சமயத்தில் வெளியே சென்றிருந்த பிரபுவும் வீடு திரும்பினர். வந்ததும் அவரிடம் சிறுவனைப்பற்றி அவள் மிகப் புகழ்ந்து கூறினள். அவரும் அச்சிறுவனைக் கண்டு ஆச்சரியப்பட்டு "உன் பேரென்னப்பா?" என்று வினவினார்.

சிறுவன் : சப்ரோனியா.

பிரபு : உங்கள் வீடெங்கே?

சி : எதிர் வீடுதான்.

பி : உங்கள் அப்பாவுக் கென்ன வேலை?

சி : பயிர் செய்வது.

இப்படி இருவரும் சம்பாஷித்துக் கொண்டிருக்க அவ்வம்மை சிறுவனுக் கென்று சில பலகாரங்களை நிறையக் கொண்டுவந்து கொடுத்தனர். சப்ரோனியாவும் அதை அன்போடு வாங்கி "அம்மா, எனக்கு இவ்வளவு வேண்டாம்; கொஞ்சம் எடுத்துக்கொள்ளுங்கள். நான் கொஞ்சம் முன்னேதான் சாப்பிட்டேன்" என்றான். ஆனால் அவ்வம்மையும் அப்பிரபுவும் அதையவ்வளவும் எடுத்துக்கொள்ளும்படி வற்புறுத்தினர். பின்னும் அச்சிறுவன் "எங்கள் உபாத்தியாயர் பார்லோ என்பவர் 'மீதூண் விரும்பேல்' என்று பெரியோர் சொலியிருப்பதனால் எப்பொழுதும் மிதமாக உணவு அருந்த வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்" என்று கூறினான். அவர்களும் அவனுடைய அறிவுக்கு மகிழ்ந்தாரெனினும் தாங்கள் தந்ததில் சிறிதேனும் எடுத்தாரில்லை. சிறுவன் தனக்கு வேண்டுமளவு உண்டு அவர்கள் தந்ததில் மிஞ்சியதை வைத்துவிட்டு அவர்களிடம் விடைபெற்றுத் தன் இல்லத்திற் கேகினான்.

அப்பிரபுவும், தாங்கள் தந்ததில் பெருமைக்காக அவன் மீத்துவைத்தானென் றெண்ணாமல், அவனுடைய பெருங் குணத்திற்கு மெச்சி, தன் மைந்தனையும் பார்லோவிடமே படிக்கவிட வேண்டுமென்று ஆவல்கொண்டார்கள். ஆகவே ஒருநாள் பார்லோவைத் தங்கள் வீட்டிற்கு அழைத்து வந்து அவருக்கு விருந்திட்டுச் சாம்சனை அவருடைய ஆதரவில் சேரவிட்டனர். பார்லோ என்பவர் மிகவும் நல்லவர், சிறுவர்களைத் திருத்தப்பிரியமும் சாதுரியமும் உள்ளவர். அவரும் பிரபுவினுடைய வேண்டுகோளுக் கிணங்கிச் சாம்சனைத் தன் வீட்டிற் கழைத்துச் சென்றார்.

மறுநாள் சப்ரோனியாவும் பார்லோ வீட்டிற்குச் சென்றான். முதன்முதலில் சாம்சன் செல்வச் செருக்கினால் தேக ஆரோக்கியத்திற்காக அவர்களுடன் காலையில் வேலைசெய்ய மறுத்தனன். சுகஜீவனம் செய்துவந்த அவனைப் பார்லோ பின்னால் அன்னமிடாது வாட்டிக் கஷ்டமின்னதெனப் புகட்டி வலியவே வேலைசெய்யப் பழக்கினர். அப்படியே நாளாக நாளாக சாம்சனது செல்வச் செருக்கும் பிடிவாத குணமும் கொஞ்சம் கொஞ்சமாய் அவனை விட்டு விலகின.

பார்லோ, சாம்சனுக்கு கல்வி கற்பதில் விருப்பத்தை உண்டாக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் ஒருநாள் சாயங்காலம் சப்ரோனியாவை ஒரு கதை வாசிக்கும்படி சொன்னார். அவனும் "ஆமாம், ஐயா, நான் உங்களை படித்து மகிழ்வித்து நிரம்ப நாளாயிற்று" என்று சொல்லி ஒரு புத்தகத்தை எடுத்து வந்து, "'ஒரு சிறுவன் கதை' என்று தலைப்பிட்டிருக்கு மிக்கதையை வாசிக்கட்டுமா?" என்று வினவினான்.



உபாத்தியாயரும், "ஆகா, அதையே படி. ஆனால் படிப்பதை நிறுத்தி நிதானமாகக் கேட்பவர்களுக்குத் தெரியும்படி தெளிவாய்ப்படி" என்று கூறினர்.

சப்ரோனியா பின்வருமாறு படிக்கலானான் :

## ஒரு சிறுவன் கதை.

அநேக வருஷங்களுக்கு முன்பு இட்டாலியா தேசத்தில் ஒரு சிறுவனிருந்தான். அவன் பெயர் கொலம்பஸ் எனப்படும். அவனுடைய தாய் தந்தையர் மிகவும் ஏழைகள். அவன் கடலோரத்தில் வசித்து வந்தான். ஆகவே அவனுக்கு நீரில் விளையாட தைரியம் வந்தது. கப்பலோட்டிகள் அநேகர் அவன் வீட்டிற்கு அடிக்கடி வருவதுண்டு. அவர்களிடம் பழகப் பழக இச்சிறுவனும் படகில் போகத் தலைப்பட்டான். வயது முதிர முதிர கொலம்பஸ் கப்பலோட்டுவதில் மிகத் தீரனானான். அவனுக்குச் சிறுவயது முதற்கொண்டே கடலில் வெகு தூரம் செல்ல வேண்டுமென்ற அவாவுண்டு; ஏனெனில் வெகு தூரத்திற்கப்பால் கடலில் ஏதேனும் பூமி தென்படும் என்ற ஒரு குருட்டு நம்பிக்கையை அவன் கொண்டிருந்தான்.

ஆனால் தன் எண்ணத்தைப் பூர்த்திசெய்து கொள்ள அவனுக்குப் போதிய பணமும் தகுந்த துணையுமில்லை; எனினும் சில நாட்களுக்குப் பிறகு ஸ்பெய்ன் தேசத்து இராணியானவள் அவனுக்கு உதவிபுரிந்தனள். அவள் கொடுத்த சில ஆட்களுடன் மூன்று கப்பல்களைத் தயார் செய்து கொண்டு கொலம்பஸ் புதிய உலகம் கண்டு பிடிக்கப் பிரயாணப்பட்டான். அப்பிரயாணிகள் வெகு நாள் கடலில் மிதந்து சென்றனர்; வருஷங்கள் பல ஆயிற்று. அவர்கள் கண்ணிற்கு ஒரு நாடாவது புலப்படவில்லை. கொலம்பசுடன் வந்திருந்த கப்பலோட்டிகள் மிகவும் வெறுப்படைந்து அவனை நிந்திக்கத் தொடங்கினர். என் செய்வான் அவன்! "வாருங்கள் இன்னும் கொஞ்ச தூரம் சென்று பார்ப்போம்; இல்லையேல் திரும்பிவிடுவோம்" என்று நயமாக அவர்களுக்குரைத்தான்.

அப்படியே சில நாளாயின. கடைசியாக அவர்களுக்கு நாடு ஏதோ ஒன்றிருப்பதற்கறிகுறியாக வெட்டுண்ட மரத்துண்டுகள் புலப்பட்டன. சிறிது தூரம் சென்றதும் பக்ஷிகள் கூவும் இனிய குரலைக் கேட்டார்கள். கப்பலோட்டிகளும் சந்தோஷத்துடன் சென்றனர். அவர்கள் பிரயாணம் ஒருவாறு முடிவு பெறப் புதிய நாடொன்றையுமடைந்தனர். இன்னும் அநேக நாடுகளையும் அவர்கள் கண்டு பிடித்துப் பின் தங்களுக்கு உதவி புரிந்த இராணியிடம் சென்று தாங்கள் கண்ட விநோதங்களைச் சொன்னார்கள். அவர்கள் கண்டுபிடித்த அநேக நாடுகளுள் இப்பொழுது அமெரிக்கா கண்டமென வழங்கிவரும் நாடுமொன்று. அமெரிக்காவைக் கண்டு பிடித்த பெருமை கொலம்பசைச் சாரும்." (கதை முற்றிற்று.)

"ஆனால் கடலுக்கப்புறமும் நாடுகள் இப்பவும் இருக்கின்றனவா?" என்று சாம்சன் உபாத்தியாயரை நோக்கிக் கேட்டான்.

பார்லோ:—இப்போதும் இருக்கின்றன; இதைப் போல ஆஸ்ட்ரேலியா என்னும் நாடு ஒன்றிருக்கிறது. அந்த நாடு கேப்டன் கூக் (Captain Cook) என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது. இன்னும் அநேக தீவுகளுமிருக்கின்றன.

சாம்சன் :—அப்படியா! இதெல்லாம் இத்தனை நாளாக எனக்குத் தெரியவே தெரியாது. நம்முடைய நாடுதான் ரொம்ப பெரிது என்று இருந்தேன்.

பார்லோ :—ஆமாம். பல புத்தகங்களை வாசிக்க வாசிக்கத்தான் இந்த மாதிரி விஷயங்களெல்லாம் தெரியும். வெளிதேசத்தைப் பற்றிய விஷயம் மட்டுமே அல்ல,—மழை எப்படி உண்டாகிறது சொல்லுங்கள் பார்ப்போம்? அல்லது, ரயில் வண்டி எப்படி ஓடுகிறது?—.......... பார்த்தீர்களா இவைகளெல்லாம் உங்களுக்குத் தெரியவில்லை.

சப்ரோனியா :—ஆமாம், அது எப்படி, ஐயா.

பார்லோ :—அவைகளைப் பற்றி மற்றொரு நாள் சொல்லுகிறேன் இதைப்போல் இன்னும் நாம் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் அநேகமுண்டு.

இவைகளை யெல்லாம் கேட்கக்கேட்கச் சாம்சன் இயற்கையாகவே நற்குணமுடையவனாதலால் தன் படியா மூடத்தனத்திற்கு மிகவும் வருந்தினான். ஆகவே அவனுக்குப் படிக்க வேண்டுமென்ற ஆவலுண்டாயிற்று.

(தொடரும்)

மா ப. தியாகராஜன், இராஜதானிக் கல்லூரி.

## சுகாதாரப் பகுதி

### முறை ஜுரம் அல்லது மலேக்காய்ச்சல்

### Malaria

(௩௱௪௪-வது பக்கத்தொடர்ச்சி.)

இதற்குமுன் மதராஸ் கார்பொரேஷன் 3-வது 4-வது டிவிஷன் சானிடெரி இன்ஸ்பெக்டராக இருந்தேன். 3-வது டிவிஷனில் நெல்குத்தி வியாபாரம் செய்பவர் பலரிருக்கின்றன ராகையால் அங்கு அனேகர் வீட்டின் வாயில்களில் நெல் ஊறவைக்கும் தொட்டிகள் பல புதைத்து வைத்திருப்பார்கள். அவைகளில் நீர் தங்கி இருக்கையில் கணக்கற்ற கொசுக்குட்டிகள் நிறைந்திருக்கும். அதை ஜனங்களுக்குக் காண்பித்து அவைகளின் கெடுதிகளையும் போதித்துத் தொட்டிகளில் நீர் தங்க ஒட்டாமல் அடிக்கடி சோதனை செய்து கொண்டிருந்தேன்.

இது நிற்க, இந்நோயைத் தடுக்கச் சிலர் க்வைனைவை (Quinine)ச் சாப்பிட்டுக்கொண்டு வருவார்கள். செல்வவந்தர்கள் தங்கள் வீடுகளில் சில அறைகளை கொசுக்கள் அணுகாவகையாகக் கட்டிக் கொள்ளுவார்கள். சிலர் இரவில் கொசுவலைகள் மூடிய கட்டில்களினுள் படுத்துறங்குவார்கள். சில பாக்கியவான்கள் இந்நோய் உள்ளவனைக் கொசுக்கள் நுழைய ஒண்ணுமல் ஏற்படுத்தியுள்ள இடங்களில் வைத்துத் தக்க சிகிச்சைசெய்து இந்நோய் பரவாவண்ணம் செய்கிறார்கள்.

இவர்களைப்போல் இருக்க உலகில் அனேக ஜனங்களுக்கு முடியாது. ஆகையால் அதை யோசிப்பதில் பயனில்லை. உள்ளதைக்கொண்டு எவ்விதம் சுகஜீவியாக இருக்க முடியுமோ அதைத்தான் யோசிக்கவேண்டும்.

அனேக இடங்களில் தங்கள் வீட்டில் புழங்கும் தண்ணீர் போக இடமில்லாமல் வீட்டின் வாயில்களிலோ, புறக்கடைகளிலோ, சில இடங்களில் வீதிகளிலோ பரவித் தேங்கித் துர்நாற்றமெடுப்பதால் அங்குள்ள ஜனங்கள் படும் அவஸ்தைகள் எழுத எட்டிலடங்கா.

இவைகளுக்குத் தக்க முழுபரிகாரம் முனிசிபாலிடியுள்ள இடங்களில் தான் இயலும். அங்கும் சில இடங்களில் ஆயிரக் கணக்காகப் பொருட் செலவு செய்தும் கொஞ்சம் கஷ்டத்தைத் தருகிறதென்றால், சாமானிய இடங்களில் ஒன்றும் செய்ய இயலாது என்பது திண்ணம்.

ஆகிலும் வீடுபற்றி எரியுங்கால் ஒன்றுஞ் செய்ய முடியாதென்று சும்மா இருந்து விடுதல் ஜனங்கள் சுபாவமல்ல. அதுபோல் கூடியவரையில் எவ்வெவ்விதங்களில் இக்கெடுதிகளைக் குறைக்க இயலுமோ அவ்விஷயங்களைக் கவனித்துச் செய்ய முயலவேண்டும்.

சாக்கடைத் தண்ணீரைப் போக்கடிக்கும் விதங்களை விபரமாக எடுத்துரைக்க இங்கு இடந்தராதாகையால் இனிவரும் நம் பத்திரிகை வாயிலாகவே பிறகு விஸ்தாரமாய் ஆராய்ச்சி செய்யலாம். ஆகிலும் இங்கு வெகு சுருக்கமாக எழுத ஆவல்.

சாக்கடைக் கால்வாய்கள் இல்லாத இடங்களிலுள்ள வீடுகளில் சுலபமாக என்ன செய்யலாமெனில் வீட்டின் வாயிலில் ஒருபுறமாகச் சுண்ணும்பு, செங்கல், சிமிட்டி இவைகளினால் சற்று அகலமாக ஓர், மேடைகட்டி தண்ணீர் சிதறாத படித் தடுக்க ஒரு கல்வரிசை நான்கு புறங்களிலும் வைத்துக்கட்டி, இதினின்றும் இவ்விதமாகவே கால்வாய் கட்டி வீட்டின் புறக்கடைப்பக்கம் விடலாம். இக்காலில் முடிவில் ஒரு தொட்டி தகுந்தபடி கட்டி அங்கு தரை மணல்பாகமாகில் தொட்டியின் அடியில் கட்டடம் வேண்டியதில்லை. ஆனால் தொட்டிக்குள் அடியில் பெரிய உடைந்த கற்களினாலும் அதன்மேல் அதற்குஞ் சிறிய உடைந்த கற்களினாலும் தொட்டியின் முக்கால் பாகத்திற்குமேல் நிறப்பிவிட்டு இத்தொட்டியில் தண்ணீரை விட்டால் சாக்கடைத் தண்ணீர் இக்கற்களின் மூலமாகச் சுத்தமாகிப் பூமியில் ஊறிப்போகும்; பூமியையும் கெடுக்காது. ஆனால் இக்கற்களை மாதத்திற்கு ஒரு முறையாவது வெளியிலெடுத்துச் சுத்தஞ்செய்து உலரப் போடவேண்டும். இதன் மத்தியில் முன்போலவே வேறு கற்களைப் போட்டு வைக்கவேண்டும். இவ்விதமாகவே மாற்றிக்கொண்டிருக்கவேண்டும்.



அங்கு பூமி மணற்பாகமில்லையேல் தொட்டியின் அடிப்பாகத்தையும் காரையாடி விடவேண்டும். தொட்டியின் மத்தியில் ஓர் கடப்பைக் கல்லை (Cuddaph slab) தொட்டியின்மேல் அரைபாகத்தில் குறுக்காக வைத்துக் கட்டி விடலாம். தொட்டியை முன்போலவே உடைந்த கற்களினால் நிறப்பவேண்டும். இத்தொட்டியின் மேற்பாகத்தில் சாக்கடைத் தண்ணீர் விழவும் ஊரின் தண்ணீர் வெளியில் வரவும் வழிகள் விடவேண்டும். சாக்கடைத் தண்ணீர் இத்தகைய தொட்டியில் ஊறி வெளிவருங்கால் சுத்தமாகி வெளிவரும். இத்தண்ணீரை செடிகளுக்கு உபயோகப்படுத்தினரின் கெடுதியில்லை இத்தொட்டியிலுள்ள கல்துண்டுகளை முன்போல் சுத்தப்படுத்திக் கொண்டிருக்கவேண்டும்.

இவ்வித கஷ்டம் ஏன் படவேண்டுமென்கிற எண்ணமுடையவர் மேடை, கால்வாய், தொட்டிகளை மட்டுமாவது கட்டி தொட்டியில் தண்ணீர் நிறைந்த பிறகு அதை மொண்டு தூரத்திலுள்ள செடி மரங்களுக்கு ஊற்றி விடலாம்.

ஓர் ஊரில் ஓர் வீதியிலுள்ளவர்கள் ஒற்றுமைப்படின் வீட்டின் சாக்கடைக் கால்வாய்களை ஒவ்வொரு வீட்டாரும் வீதிப் புறமாகத் திருப்பி தண்ணீரை வீதியில் விடலாம். ஆனால் அவ்வீதியிலுள்ளவர்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து பிரிவுபோட்டுப் பணம் வசூலித்துப் பொதுவாக வீதியில் வீட்டின் தெருப்புறமாகவே சாக்கடைக் கால்வாய் கட்டி வீதியின் கோடிவரையில் கொண்டுபோய் விடுத்து அதன் கடையில் ஓர் பெரிய தொட்டிகட்டி, அங்கு சேரும் ஜலத்தை ஓர் பிப்பா வண்டியில் முகந்து ஊருக்கு சற்றுத் தூரத்திலுள்ள வயல்களிலோ வெளிகளிலோ ஊற்றி விடலாம். இதற்கு ஊர் ஜனங்கள் ஒத்துழைத்தால் ஊர் சீர்பெறுமென்பதில் ஐயமில்லை.

இன்னும் எழுத விரிவதால் இங்கு நிறுத்தினோம்.

இதற்கு ஒற்றுமைதான் வேண்டும். இவைகளை ஓர் வீட்டார் அனுசரித்து மற்றவர்கள் ஆதரிக்காவிடில் அவ்வளவு பிரயோஜனத்தைத் தராது.

ஒற்றுமையின்றி இன்னும் கக்ஷிபேதங்களையே கையாடுந் திறமைவாய்ந்தவர்கள் வாழும் இடங்களில் ஊரிரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்போல். நயவஞ்சகமுள்ள இந்நோயாகிய சகுனிமாமனையும் இன்னும் பற்பல நோய்களையும் விருந்திற்கு அழைப்பதாகும்.

உலகத்தில் மிகவும் தாழ்ந்த நிலைமையுள்ள இனத்தவரும் தாங்கள் ஒற்றுமைப்பட்டு உழைத்துவந்தால் அவர்களடைந்த உயர்ந்த நிலைமையைக் கண்டுகளிக்க ஹேதுவாகின்றது.

ஆனால் நம்மினத்தாரோ உயர்ந்த நிலைமையிலிருந்து முக்கியமாக கக்ஷிபேதங்களைக்கையாண்டு ஒற்றுமைகெட்டு வறுமையிற்குன்றி தாழ்ந்தபடியில் இருப்பதை உன்னில் மிகவும் பரிதாபத்தினும் பரிதாபமே. இனியேனும் உலகின்கண் நாகரீகங்கள் முற்றுவதையாவது கவனித்து அனுசரித்து, கக்ஷிபேதங்களை அறவே விட்டுப் போட்டு மனமார ஊக்கத்துடன் ஒற்றுமையில் தலைமைபூண்டு ஒழுகி நம்மினம் முன்னேற்றமடையும் உபாயங்களை உள்ளபடி தேடி உழைத்து முன்னுக்குவர நம்மைக்காக்கும் அறுமுகக் கடவுள் அருட்கண் பாலிப்பாராக.

சுவரை வைத்துக்கொண்டுதான் சித்திரமெழுதவேண்டும் என்று கூறிய முதுமொழிக்கிணங்க, முற்றுந்துறந்த முனீந்திரர்களும் காயகற்பந்தேடி ஊனுடலைப்போற்றி வளர்த்து தாங்கள் அடையவேண்டிய ஜீவன்முக்தி நிலையை அடைந்து பிறகு விதேக முக்தியை அடைந்தார்கள் என்றால், மூவாசையில் முதிர்ந்த நாம அவ்வாசைகளின் பலாபலன்களை அடைய தேகத்தை நோய்கள் முற்றுகை போடாவண்ணம் நம்மால் இயன்ற அளவில் பாதுகாத்துக் கொள்வது அத்தியா வசியமெனத் தோன்றுகின்றது.

மா. பரமகுருநாத முதலியார்,
சானிடரி இன்ஸ்பெக்டர், திருமயிலாப்பூர்.

---

### அநுதாபம்.

இராமநாதபுரம் ஜில்லா பரமக்குடியில் 8-11-2- சனிக்கிழமை இரவு $7\frac{1}{2}$-மணிக்குப் பிரபல வியாபாரியும், தனவந்தரும் ஆகிய திருவாளர் ம. ப. இராமசாமி முதலியார் அவர்கள் எல்லாம்வல்ல இறைவன் திருவடி அடைந்தமையைக் கேட்டுப் பெரிதும் வருந்துகிறோம். அன்னாரது புத்திரர் திருவாளர் ரா. ம. இருளாண்டி முதலியாருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எங்களது அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். அவரது ஆன்மா சாந்தியடையுமாறு இறைவனை வேண்டுகிறோம்.

அம்மாதிரியே விற்பதற்கென்று சிலர் இருப்பார்களாயின் அவர்கள் எந்நேரமும் ஜவுளிக்கடையில் அலைந்து கொண்டிருப்பதினால் ஜனங்கள் எவ்விதமான துணிகளை விரும்புகிறார்களென்று அறிந்து அம்மாதிரி துணிகளையே நெய்யும்படி சொல்லி நெய்தால் சீக்கிரமாக விற்பனையாகும். உதாரணமாக, ஓராண்டுக்குமுன் சதாரண பெண் மக்கள் யாவரும் கொட்டடி சேலைகளை உடுத்தி வந்தார்கள். ஆனால் இப்பொழுதோ புட்டா சேலைகளை உடுத்துகிறார்கள். இதை யறியாமல் நம்மவர்கள் என்ன இப்பொழுது சேலைகளே விற்பதில்லை என்று கூக்குரலிடுவதினால் யாது பயன்? காலத்துக்குக் தக்க கோலமாக ஜனங்கள் எவ்விதமான துணிகளை விரும்புகிறார்களோ அவ்விதமான துணிகளையல்லவோ நெய்தல்வேண்டும்? ஆகையால், நெய்வதற்குச் சிலரும், ஓடுவதற்குச் சிலரும், தோய்வதற்குச் சிலரும், விற்பதற்குச் சிலருமாக ஒத்துழைத்து வருவார்களானால் என் இயந்திரத்தறியில் நெய்த துணிகளின் விலைக்குச் சரியாகயில்லாவிட்டாலும் சற்று ஏறக்குறைய விற்கக்கூடாது?

சில ஊர்களிலுள்ளவர்கள் தவிர நம்மவர்களுள் பெரும்பாலார் இயந்திரங்களோடு போட்டிபோட வேண்டியிருக்கிற சாதாரண மட்ட துணிகளையே நெய்கிறார்கள். அவ்வாறன்றிப் பட்டு சரிகை சம்பந்தப்பட்டதும், 40 நெம்பருக்கு மேற்பட்டதுமான விலையுயர்ந்த துணிகளை நெய்யவும் கற்றுக்கொள்ள வேண்டும். மட்டத் துணி நெய்கிற சொந்தத் தறிகாரனைக் காட்டிலும், அன்றாடம் இரண்டு மூன்று மைல் நடந்து போய்க் கூலிக்கு உயர்ந்த துணி நெய்பவனது வருமானம் அதிகமாயிருக்கிறது. நம்மவர்கள் எல்லாரும் உயர்ந்த துணிகளை நெய்ய முடியாதாயினும் ஒரு பகுதியினராவது அத்துறையிலிறங்குவது அவசியமென்றே கருதப்படுகிறது.

நீ. இராஜவேலு முதலியார்,
சைவக் கல்விச்சாலை, சென்னை.

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்து நிருவாக சபையின் தீர்மானங்கள்.

1928௵ நவம்பர்௴ 24உ சனிக்கிழமை மாலை 5 30-மணிக்கு நமது சங்கத்தின் நிருவாக சபைக்கூட்டம் அரண்மனைக்காரன் தெரு 31-ம் நெம்பர் வீட்டில் திரு. மா. பா. கந்தசாமி முதலியார், பி ஏ., பி.இ, அவர்களின் தலைமையின்கீழ்க் கூடியது அவ்வமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :—

### உபகாரச் சம்பளம்.

1. நவம்பர் மாதமுதல் காஞ்சிபுரம் திருவேங்கடத்திற்கும் (II Form) முனிசாமிக்கும் 5-ம் வகுப்பு) அரைச் சம்பளமும், திருநெல்வேலி லக்ஷ்மிக்கு (I Form) மாதமொன்றுக்கு ரூ. 3-ம், கோயம்புத்தூர் பெருமாளுக்கு (1st University class) அக்டோபர் மாதமுதல் மார்ச்சு மாதம் வரை மாதமொன்றுக்கு ரூபாய் பத்தும் கொடுக்கவேண்டும்.

2. S. சண்முகத்துக்கு (Second University Class) சாப்பாட்டுச் செலவுக்கு மாதமொன்றுக்குக் கடனாக ரூ. 14 வட்டியில்லாது கொடுத்துதவவேண்டும். இதற்குரிய உடன்படிக்கையை ஷை மாணவரிடம் அமைச்சரவர்கள் செய்து கொள்ளவேண்டியது.

3. உத்திரமேரூர் சரவணபவனுக்கு (V Form) நவம்பர் மாதமுதல் அரைச் சம்பளம் கொடுக்கவேண்டும்.

### கிளைச் சங்கங்கள்.

4 நமது சங்கத்தின் அங்கங்களாவதற்கு மனுவும் கட்டணமும் அனுப்பியுள்ள கீழ்க்கண்ட இடங்களிலுள்ள செங்குந்தர் சங்கங்கள் நமது சங்கத்தின் அங்கங்களாக அங்கீகரிக்கப்படுகின்றன :—மண்டலமாணிக்கம், மதுரை, வீரவநல்லூர், காஞ்சி (வாலிபர்), கருங்குழி மேலவலம்பேட்டை, மோகனூர், அசனம்மாபேட்டை, சிறுகுளத்தூர், அம்மையப்பட்டு, மானம்பதி, வாழுமங்கலம், மேலவலம்பேட்டை.

### செங்குந்தர் முதலாவது மகாநாடு.

5. ஈரோடு செங்குந்த சங்கத்தினர் 10-10-28-ல் திரு. M. லக்ஷ்மண முதலியார் அவர்களின் தலைமையின்கீழ்க்கூடித் தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாட்டினை அடுத்த தை மாதம் ஈரோட்டில் நடத்துவதற்குச் செய்துள்ள தீர்மானத்தை நமது சங்கம் மகிழ்வுடன் அங்கீகரிக்கிறது.



6. மேற்படி மகாநாட்டினை நமது சங்கத்தின் சட்டப்படிக்கு நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கும், அதற்கு வேண்டிய தொகையை வரவேற்புச் சபையினரின் உதவியுடன் வசூலித்து வரவும் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரை மகாநாட்டின் சிறப்புக் காரியதரிசியாக இக்கூட்டம் தேர்ந்தெடுக்கின்றது.

7. மகாநாடு நடைபெறும் சமயம் நமது சங்கத்தின் பொதுக்கூட்டமும் நடைபெற வேண்டியதாயிருப்பதால், கட்டணம் செலுத்திக் கிளைச்சங்கங்களாகச் சேர்ந்துள்ள செங்குந்த சங்கங்கள் தலைச் சங்கத்தின் சட்டதிட்டங்களின்படி டிசம்பர்௴ 2உக்குமுன் அச்சங்கத்து அங்கத்தினராகக் கூடிய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அவர்கள் பெயர்களைத் தலைச்சங்க அமைச்சர்களுக்கு யாதொரு காலதாமதமுமின்றித் தெரிவிக்க வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.

8. மகாநாட்டின் வரவேற்புச் சபைக்கு உதவியாக இருந்து மகாநாடு சம்பந்தமான விஷயங்களில் ஆலோசனை கூறவும், கடிதப் போக்குவரத்து நடத்தவும், அவசியமான பிரசுரங்களை அப்போதைக்கப்போது வெளியிடுவதற்குத் தயாரிக்கவும் திருவாளர்கள் மா. அ கனகசபை முதலியார், மா. பா. கந்தசாமி முதலியார், மு. சரவண முதலியார், மகாநாட்டுச் சிறப்புக் காரியதரிசி பி. செ. மாணிக்கவாசக முதலியார், தலைச்சங்க அமைச்சர் ம. சண்முகசுந்தர முதலியார் ஆகிய ஐவரடங்கிய ஒருஆலோசனை சபையைத் திரு. ம. சண்முகசுந்தர முதலியார் அவர்களையும் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரவர்களையும் காரியதரிசிகளாக (Conveners) அமைத்து இக்கூட்டம் தேர்ந்தெடுக்கின்றது.

9. இம் மகாநாடு நடைபெறும் சமயம் செங்குந்த வியாபாரிகள் மகாநாடும், செங்குந்த வாலிபர் மகாநாடும் கூட்டப்படல் வேண்டும்.

10. மேற்படி வியாபாரிகள், வாலிபர் மகாநாடுகளின் வரவேற்புச் சபைகளை அமைப்பதற்கு ஈரோடு சங்கத்தினர் உதவிசெய்ய வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.

11. முதலாவது தென்னிந்திய செங்குந்த மகாநாட்டுக் கொடியுயர்த்த காஞ்சிபுரம் முனிசிபல் கௌன்சிலர் திருவாளர் ம. சாமிநாத முதலியார் அவர்களையும், தலைமை வகிக்க புதுவை, பிரெஞ்சு அரசாங்கத்தின் தலைமை யமைச்சர் திருவாளர் ஆ. வே. முத்தையா முதலியார், பி.ஏ., பி.எல், அவர்களையும், முதலாவது தென்னிந்திய செங்குந்த வியாபாரிகள் மகாநாட்டுக்குத் தலைவராகத் திருவாளர் தென்காசி பாங்கர் (Banker) T. P. K. ஆறுமுக முதலியார் அவர்களையும், முதலாவது தென்னிந்திய செங்குந்த வாலிபர் மகாநாட்டுக்குத் தலைவராகத் திருநெல்வேலி வக்கீல் S. பழநியாண்டி முதலியார் பி ஏ., அவர்களையும் தேர்ந்தெடுக்க மேற்படி மகாநாடுகளின்வரவேற்புச் சபைகளை நமது தலைச்சங்கம் வேண்டிக்கொள்ளுகின்றது.

12. மேற்படி மகாநாடுகளைக் கூட்டும் இடத்தில் நெசவு, நூல் நூற்றல் முதலிய சம்பந்தமான கண்காட்சி, வியாபாரசாலைகள் முதலியவைகளையும் ஏற்படுத்த நமது தலைச்சங்கம் மேற்படி வரவேற்புச் சபைகளை வேண்டிக்கொள்ளுகின்றது.

13. தலைச்சங்கத்தின் வருஷாந்திர அறிக்கைப் பத்திரத்தைத் தயாரிக்கவும், சங்கத்தின் வரவு செலவு கணக்குகளைப் பரிசீலனை செய்து கொடுக்கவும் இக்கூட்டம் திருவாளர்கள் மா. அ. கனகசபை முதலியாரவர்களையும், ம. சண்முகசுந்தர முதலியாரவர்களையும் நியமிக்கின்றது.

ம. சண்முகசுந்தர முதலியார், எம் ஏ எல்.டி.,
தலைச்சங்க அமைச்சர்.

---

ஒருசால் வேஷன் ஆர்மிப்பெண்ணும் கிழவனும்.

சால்-பெண்:— பெரியவரே! கடவுளுக்காக ஒரு ரூபாய் கொடுப்பீரா'

கிழவன்:—'பெண்ணே! உனக்கென்ன வயதாயிற்று'

சால் பெண்:—'ஐயா எனக்குப் பதினெட்டு வயதாயிற்று'

கிழவன்:—பெண்ணே! எனக்கு வயது 75 ஆகிறது. உன்னைவிட நான் அவரை முன்னே பார்ப்பேன். அப்போது பணத்தை அவரிடம் நேரில் கொடுத்துவிடுகிறேன்.

## தலைச் சங்கத்தாரின் சுற்றுப் பிரயாணம்.

6-11-28 தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கப் பிரதிநிதிகளாகிய திருவாளர்கள் பி. செ. மாணிக்கவாசக முதலியாரும், தி. அ. சண்முக முதலியாரும் மாலை 6-மணிக்குச் சென்னையினின்று புறப்பட்டுக் காஞ்சிபுரம், ஐயங்கார்குளம் முதலிய இடங்களைச் சுற்றிப் பிரசாரம் செய்துவிட்டு 9-11-28-ல் திரு. தி. அ. சண்முக முதலியார் உத்திரன்மேரூரை யடைந்தார். அவ்விடத்து திரு. உ. கா. பொன்னுசாமி முதலியார், திரு. ப. க. தங்கவேல் முதலியார் அவர்கள் பிரசாரகரை வரவேற்று உபசரிக்க இரவு 9-மணிக்கு மானம்பதியையடைந்து திரு. சம்பந்தமூர்த்தி முதலியார் அவர்களால் வரவேற்று உபசரிக்கப் பெற்று 10-11-28 காலை 7-மணிக்குப் பிரசாரகரும் திரு. சம்பந்தமூர்த்தி முதலியாரும் பெருநகருக்குச் சென்று அவ்விடத்துள்ள திருவாளர்கள் ப. கோவிந்த முதலியார், சு. பிச்சுலிங்க முதலியார், கன்னியப்ப முதலியார் அவர்களைக் கண்டு தற்போது ஈரோட்டில் கூட இருக்கும் மகாநாட்டு விஷயமாகச் சில விஷயங்களைப் பேசிவிட்டு மானம்பதிக்கே வந்து திரு. சு. அருணாசல முதலியார் அவர்களைக் கண்டு 11-11-28 பகல் 1-மணிக்குச் செங்குந்தர் பொதுக்கூட்டம் ஒன்று கூட்டினர். அக்கூட்டத்திற்குச் சுமார் 200 செங்குந்தர்கள் வரை கூடியிருந்தார்கள். அதுசமயம் பெருநகர் திரு. சு. பிச்சுலிங்க முதலியாரும், உத்திரன்மேரூர் திரு.ப.க. தங்கவேல் முதலியாரும், விசூர் திரு. த. தங்கவேல் முதலியாரும் வந்திருந்தார்கள். அக்கூட்டத்திற்குத் திருவாளர் சு. அருணாசல முதலியார் அவர்கள் தலைமை வகிக்க, திரு. பிச்சுலிங்க முதலியார் ஒற்றுமை என்பதைப் பற்றியும், திரு. அ. பசுபதி முதலியார் பத்திரிகை என்பது பற்றியும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கப் பிரசாரகர் திரு. தி. அ. சண்முக முதலியார் சங்கமும் நமது கடமையும் என்பது பற்றியும், விசூர் திரு. த. தங்கவேல் முதலியார் கல்வி என்பது பற்றியும் உபந்யசித்தார்கள். அதுகாலை மானம்பதி என்னும் கிராமத்தில் நமது தலைச்சங்கத்திற்குக் கிளைச் சங்கமாக அமைத்துள்ள சங்கத்துக்குப் புது வருஷத்துக்கு உத்தியோகஸ்தர்கள் நியமிக்க வேண்டுமெனத் திரு. சம்பந்தமூர்த்தி முதலியாரும், திரு. கு. முருகப்ப முதலியாரும் பிரேரேபணை செய்ய அங்கு கூடியிருந்த செங்குந்தகுல சீமான்கள் அதற்கிசைந்து அதற்கு வேண்டிய உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுத்தார்கள்.

நமது பிரசாரகர் 12-11-28 பகல் 11-மணிக்கு அம்மையப்பட்டு கிராமத்திற்குச் சென்று யூனியன் போர்டு பிரசிடெண்டு திரு. சு. பாலசுந்தர முதலியார், திரு. அ. மாணிக்க முதலியார், அப்பாவு முதலியார் முதலியவர்கள் முயற்சியால் அவ்விடத்தில் பிரசாரம் நிகழ்த்தி; பிற்பகல் திரு. விஸ்வநாத முதலியார், திரு. வடிவேல் முதலியார், தமிழ்ப்பண்டிதர் திரு. T. கோவிந்தராஜு முதலியார் அவர்களுடன் பொன்னூர் கிராமத்தையடைந்து திரு. கன்னியப்ப முதலியார், திரு. சாமி முதலியார், திரு. வேதாசல முதலியார், திரு. அ. குமாரசாமி முதலியார் அவர்கள் உதவியைக்கொண்டு அவ்விடத்து நமது குலச்சங்க சம்பந்தமான சில ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, 13-11-28 பகல் 1-மணிக்குத் திரு. தணிகாசல முதலியாருடன் பிரசாரகர் குணகம்பூண்டி புதூரையும், குணகம்பூண்டி கிராமத்தையும் அடைந்து, திரு. வீரப்பெருமாள் முதலியார் அவர்களால் உபசரிக்கப்பெற்று, 14-11-28 காலை சொக்கப் பெருவளூரை யடைந்து அங்குள்ள பெரிய தனம் திரு. இரங்கைய முதலியாரால் உபசரிக்கப்பெற்று, அடுத்த தைமீ ஈரோட்டில் கூடவிருக்கும் மகாநாடு சம்பந்தமாய் அவர்களுக்குச் சொல்லிவிட்டு, 15-11-28 காலை திரு. இர. கந்தசாமி முதலியாருடன் தெள்ளாறை யடைந்து, திரு. அ. முருகேச முதலியார் அவர்களைக் கண்டு அங்கு சங்கம் ஏற்படுத்த வேண்டிய ஏற்பாடு செய்துவிட்டு, அம்மையப்பட்டுக் கிராமத்தையடைந்து திரு. T. கோவிந்தராஜு முதலியார் அவர்களால் உபசரிக்கப்பட்டு 16-11-28 காலை 7-மணிக்கு அம்மையப்பட்டு ஜவுளி வியாபாரம் திரு. ஆறுமுக முதலியாருடன் கொடுங்காலூரையடைந்து, திரு. கு. கன்னியப்ப முதலியார் திரு. மாணிக்க முதலியார் இவர்கள் பெருமுயற்சியால் இரவு 8 மணிக்குச் சிவாலயத்தில் செங்குந்தர் பொதுக்கூட்டம் ஒன்று கூட்டி அக்கூட்டத்திற்கு திரு. வையாபுரி முதலியார் தலைமை வகிக்க, திரு. தி. அ. சண்முக முதலியார் செங்குந்தர் மகாநாடு என்னும் விஷயத்தைப்பற்றி உபந்யசித்து அவ்வூரில் ஒரு செங்குந்த சங்கம்



ஸ்தாபித்துவிட்டு 17-11-28 இரவு 9-மணிக்குச் சென்னைக்குப் புறப்பட்டு 18-11-28 காலை 7 மணிக்குச் சென்னை வந்து சேர்ந்தார். நமது பிரசாரகருக்கு உடனிருந்து உபசரித்து அவருக்கு வேண்டிய உதவிபுரிந்த நமது செங்குந்த குல சீமான்களுக்குத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் நன்றியறிதலைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறது.

# செங்குந்தர் கிளர்ச்சி

## செங்கற்பட்டு ஜில்லாவில் கிளர்ச்சி.

### மானம்பதி செங்குந்த சங்கம்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கப்பிரதிநிதியாகிய திரு. தி. அ. சண்முக முதலியார் அவர்கள் 6-11-28 மாலை சென்னையினின்றும் புறப்பட்டு காஞ்சீபுரம், ஐயங்கார்குளம் முதலிய இடங்களுக்குச் சென்றுவிட்டு 9-11-28ல் மானம்பதி கிராமத்தை யடைந்தார். அதுபோது அவ்விடத்திலுள்ள செங்குந்த பிரமுகர்களும் திரு சம்பந்தமூர்த்தி முதலியார் அவர்களும் (கிராமமுனிஸீப்) பிரதிநிதியை வரவேற்று உபசரித்தனர். பிறகு அன்றையதினமும் மறுநாள் 10-11-28-ந்தேதியும் விசூர், பெருநகர் முதலிய கிராமங்களுக்குச் சென்று சந்தாக்களை வசூல் செய்தனர். மறுநாள் 11-11-28 பிற்பகல் 2-மணிக்கு மானம்பதி போர்டு பெண் பாடசாலையில் செங்குந்தர் பொதுக்கூட்டம் ஒன்று கூடிற்று. பெருநகர் திரு. சு. பிச்சுலிங்க முதலியார், உத்திரன்மேரூர் திரு. தங்கவேல் முதலியார், திரு. த. மாணிக்க முதலியார், இரணியசித்தி திரு. நடராஜ முதலியார், காஞ்சீபுரம் திரு. R. இராஜமாணிக்க முதலியார் முதலியோர் அக்கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். கூட்டத்திற்கு திரு. S. அருணாசல முதலியார் தலைமை வகிக்க பெருநகர் திரு, சு. பிச்சுலிங்க முதலியார் "ஒற்றுமை" என்னும் விஷயத்தையும் திரு. அ. பசுபதி முதலியார் "சமூகமும் பத்திரிகையும்" என்னும் விஷயத்தையும் தி அ. சண்முக முதலியார் "சங்கமும் நமது கடமையும்" என்பதைப்பற்றியும், விசூர் திரு, த மாணிக்க முதலியார் "கல்வி" என்பதைப்பற்றியும் கேட்போர் மனது உருகும்படி பல உதாரணங்காட்டி உபந்யசித்தார்கள். பிறகு இவ்வூரில் ஒரு வருடத்திற்குமுன் ஏற்படுத்தப்பெற்ற செங்குந்த சங்கம் ஒற்றுமைக் குறைவால் சிதைந்திருந்ததை ஒன்றுபடுத்தி புதிப்பிக்க வேண்டுமென எல்லோராலும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டு கீழ்க்கண்ட உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப் பெற்றனர்.

**தலைவர்.**
திரு. S. அருணாசல முதலியார்.

**உப தலைவர்.**
திரு. S. வேணுகோபால முதலியார்.

**காரியதரிசிகள்.**
திரு. R. சம்பந்தமூர்த்தி முதலியார்.
திரு. அ. துரைசாமி முதலியார்.

**பொக்கிஷதார்.**
திரு. கு. முருகப்ப முதலியார்.

**கணிதப் பரிசோதகர்.**
திரு. அ. பசுபதி முதலியார்.

**பிரசாரகர்கள்.**
திரு. S. ஆறுமுக முதலியார்.
,, S. பசுபதி முதலியார்.

**போஷகர்.**
திரு. வே. அண்ணாமலை முதலியார்.

இவர் வருஷம் 1-க்கு ரூபா. 10 நன்கொடை கொடுக்க ஒப்புக்கொண்டார்.

வருடம் ஒன்றுக்கு ஒவ்வொரு நிர்வாக அங்கத்தவரும் ரூபா. ஒன்று சந்தா செலுத்தவேண்டுமென்றும், இச்சங்கத்தை சென்னையிலுள்ள தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்குக் கிளைச் சங்கமாக சேர்க்க வேண்டுமென்றும் தலைச் சங்கத்திற்கு வருடம் ஒன்றுக்கு ரூபா. 15 கட்டணம் செலுத்தவேண்டுமென்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப் பெற்றது. தலைவர் பின்னுரைக்குபின் அனைவருக்கும் வந்தனமளிக்கப்பட்டு கூட்டம் இனிது நிறைவேறியது.

R. சம்பந்தமூர்த்தி முதலியார்,
12-11-28. காரியதரிசி.

### சிறுதலைத்தூர் செங்குந்த வாலிபர் சங்கம்.

13-9-28 அமாவாசையன்று இரவு 7-மணிக்கு கற்பக விநாயகர் ஆலயத்தில் கூட்டம் கூட்டப்பட்டது. அதில் திருவாளர் வே. பொன்னுசாமி முதலி

யார் தலைமை வகிக்க ர. ராமசாமி முதலியார் கடவுள் வாழ்த்து பாடினர்.

2. உபதலைவர் கு. அப்பாவு முதலியார் சகாதாரத்தைப் பற்றியும் நல்வழியைப் பற்றியும் சந்தா நேயர்களுக்கு நீண்டநேரம் புகட்டினர்.

3. காரியதரிசி தி. நா. அண்ணாமலை முதலியார் அன்னதானப் பலனைப்பற்றி உபந்நியாசித்தார்.

4. நமது தலைச் சங்கத்திற்கு அனுப்பவேண்டிய கட்டணம் ரூபா 5-ம் 17-9-28 அன்று அனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

5. சங்கத்தின் செலவிற்காக நபர் ஒன்றுக்கு 0-1-0 அணா வீதம் வசூல் செய்யப்பட்டது. பின்பு தலைவர் தி. வே. பொன்னுசாமி முதலியார் தலைமையின் கீழ் அனைவரும் நன் மனதுடன் ஸ்ரீமத் வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீசிவசுப்பிரமணியக்கடவுளை உள்ளன்புடன் தியானித்து இரவு 10-மணிக்கு இனிது கூட்டம் கலைந்தது.

தி. நா. அண்ணாமலை முதலியார்,
காரியதரிசி.

### மருதவரையின்கண் நிறுவியிருக்கும் உயர்சைவச் செங்குந்தர் உத்தமபண்டித தருமடாலயத் திறப்பு விழா.

சிறுத்தோங்கும் கொங்கு நாட்டிற்றிலகமாய் விளங்கும் கோவை நகருக்கு மேற்கெல்லையாய் நின்றும்; பல்லோராலும் புகழ்ந்து போற்றும் பவானி, நொய்யில் என்னும் இரண்டு புண்ணிய நதிகளுக்கு மாறு வெள்ளப் பெருக்கினுக்கோர் நிலையாய்ப் பரந்து நிற்கும் மூர்த்தி குளத்தினைப் பெற்று எல்லா வளங்களையும் உடையதாய், நொய்யிலாற்றின் தென் கரையிலுள்ள பேரை வனமென்னும் மேலைச் சிதம்பரமாகிய திருப்பேரூரின் வடமேற்றிசையிலும் கிழக்குநோக்கி வடகலை யுயர்ந்த மூன்றாம் பிறைச் சந்திரனைப் போன்று வியாபித்துத் தனது முடியிலிருந்து அடிவரை முறையே சொட்டுப்பாறை, புற்றுக்கண் சுனை முருகன் சுனை, பாம்பாட்டிச்சித்தர் சுனை, இடும்பாசுரன் சுனை ஆகிய ஐந்து தீர்த்தங்களையும் உடைத்தாயிருக்கும் மருதவரை நடுவே முருக தீர்த்தத்திற்கு வடதிசையாய் பல்வேறு சைவமடாலயங்களால் சூழப்பெற்று,ஆனைமுகன் ஆலயத்திற்கு வடமேல் திசையில் கிழக்கு நோக்கி எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமான் ஆலயத்திற்கு வடகீழ்த்திசையில் அவ்வானைமுகன் ஆலயத்திற்கு நேர் வடக்குத் திக்கில் தெற்கு நோக்கி நிறுவியிருக்கும் மடாலயமே நமது உயர்சைவச் செங்குந்தர் உத்தமபண்டித தருமடாலயம், ஆகும்.

இம்மடாலயமானது, அத்திருப்பேரூருக்கு வடக்கே இரண்டு நாழிகைத் தூரத்திலும், அம்மருதவரைக்குக் கிழக்கே மூன்று நாழிகைத் தூரத்திலும் இருக்கும் வடவழி என்னும் கிராமத்தைத் தலையாகக் கொண்ட ஏழூர் நாடுகளும், அவைகளைச் சேர்ந்த சிற்றூர் நாடுகளும் உதவி செய்ய அவ்வடவழியைச் சேர்ந்த மருதாபுரம் என்னுங் கிராமத்தில் வசிக்கும் உயர்சைவச் செங்குந்தர் திருவாளர் மா. நஞ்சப்ப முதலியார் என்பவரது முயற்சியால் விபவ ஆண்டு சித்திரைத் திங்களில் கட்டி முடியப்பெற்றது. அதன் திறப்புவிழா நிகழ்த்தவேண்டி வடவழி நாட்டாண்மை திருவாளர் கா. அங்கண்ண முதலியார் என்பவர் ஏழூர் நாடுகளுக்கும் அவைகளைச் சேர்ந்த சிற்றூர் நாடுகளுக்கும் விபவ ஆண்டு ஆவணித்திங்கள் இருபத்தாறும் நாள் திங்கட்கிழமை ஏகாதசி திதியும் பூச நட்சத்திரமும் கூடிய சுபயோக நன்னாளில் உதயாதி 18 விநாடிக்குள் அத்திறப்பு விழா அம்மருதவரையில் நடத்துவதாகத் திருமுகம் அனுப்பினர் அதன்படி எல்லோரும் அங்கு வந்திருந்தனர். அன்று அத்திறப்பு விழா சிறப்பாய் நடந்தேறியது. அவ்வமயத்தே செங்குந்தரல்லாத பெரியோர்களில் வடவழி ஆறை நாட்டுக் கவுண்டராகிய திருவாளர், ஈ கல்லாக் கவுண்டரவர்களும், தொண்டமுத்தூர் சப் இனிஸ்பெக்டர் திருவாளர் கருத்தசாமி நாடார் அவர்களும், தெலுங்கபாளையம் திருவாளர் ஆறுமுகக் கவுண்டரவர்களும் இன்னும் மற்றுமுள்ள பெரியோர்களும் வந்திருந்தனர். பின்னர் அங்கு திருக்கோயில் கொண்டெழுந்தருளியிரா நின்ற எந்தை முருகப் பெருமானுக்கு அபிடேகமும், ஆராதனையும் மிக்க அழகு பெற நடைபெற்றது. உச்சிக்காலத்தில் யாவரும் உண்டு ஆனைமுக ஆலயத்திற்றங்கினர். அப்பொழுது எமது வடவழியின் பிரிவினையை ஒற்றுமைப் படுத்த எண்ணங்கொண்ட மேற்காட்டிய திருவாளர்களாகிய தொண்டமுத்தூர் சப் இனிஸ்பெக்டர் கருத்தசாமி நாடார் அவர்களும், தெலுங்கபாளையம் ஆறுமுகக் கவுண்டர் அவர்களும், நமது செங்குந்தர்களாகிய ஏழூர் நாட்டினரையும் அவர்களுக்குச் சேர்ந்த சிற்றூர் நாட்டினரையும் கட்சி யேற்பட்ட காரணத்தைக் கேட்கவே அப்பெரியார்கள் இத்திறப்பு விழாவுக்கு வாராதிருந்த தெற்கு வீதி கட்சிக்காரர்களை அவ்விடம் வரவழைத்து இருகட்சியினர் வழக்குகளையும் வினவியபின் அவர்களது முடிவையும் அனுசரித்து ஒரு வழிப்படுத்த வேண்டியது சாலச்சிறந்ததெனச் சொல்லினர் அவ்வாறே அன்னவர்களை அழைத்து வரச் செய்தனர். இவ்வாறாக அற்றைப் போழ்து கழிந்தது. அன்றிரவே அத்தென் வீதிச் செங்குந்தர்களும் வரலாயினர்.



மற்றைநாட் காலையில் முருகப்பெருமான் ஆலயத் தமர்ந்து நியாயத்தை ஆரம்பித்தனர். அத்தருணத்தே முன்னுரையாகத் திருவாளர் கருத்தசாமி நாடார் அவர்கள் ஒற்றுமை என்பதைப் பற்றியும் சைவசமயத்தின் உண்மையைப் பற்றியும் தெளிவாக விளக்கி, "ஒற்றுமை பிரியாச் சைவச் செங்குந்த மரபிற்றோன்றிய உங்களுக்கு பிரிவினையே கூடாது" என்று கூறித் தமக்குத் துணையாகவிருந்த திருவாளர் ஆறுமுகக்கவுண்டரவர்களைப் பார்த்து அத்திறப்பு விழாவுக்கு வாராத காரணத்தை அத்தெற்கு வீதியின் செங்குந்தர்களை வினவும்படி கேட்டுக்கொண்டார். பிறகு, திருவாளர் ஆறுமுகக் கவுண்டர் அவர்கள் அத்தென்பிரிவினருக்குத் தலைவராகிய திருவாளர் பழனியப்பமுதலியார் அவர்களையும் மற்ற ஊரார்களையும் கக்ஷியுண்டானதன் காரணத்தைத் தீரவிசாரித்து மேற்படி பெரியோர்கள் திரு. கா. அங்கண்ண முதலியார் அவர்கள்தான் நாட்டாண்மைக்காரரென்று தெரிகிறபடியால் மே. திரு பழனியப்பமுதலியார் அவர்களும் அவரைச் சார்ந்த கக்ஷிக்காரர்களும் மேற்படியாரை நாட்டாண்மைக்காரராக அங்கீகரிக்கவேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். எல்லோரும் உண்டபின்பு தெற்குவீதி கக்ஷித்தலைவராகிய திரு. பழனியப்ப முதலியார் அவர்கள் மேற்படி தீர்மானத்தை ஒத்துக் கொண்டு உறவின் முறையாரோடு உணவருந்தினர். பின்னர் திரு. பழனியப்ப முதலியார் அவர்கள் தாம்பூலத்தை யெடுத்துத் திரு. கா.அங்கண்ண முதலியாரவர்களிடம் கொடுக்க அவரும் அதனைப்பெற்று அவருக்கு ஆசிநன் கூறித் தாம்பூலம் தந்தனர். பின்பு எல்லோரும் குதூகலத்தோடு அங்கிருக்கும் மலைவாசிகளுக்கு உண்ண உணவும் உடுக்கத் துணியும் கொடுத்து வீடு போந்தனர்.

ஆகையால் இப்பெரியதோர் காரியத்தை மேற்கொண்டு அவ்வடவழியின் பிரிவினையை ஒற்றுமைப் படுத்திய அத்தலைவர்கள் இருவருக்கும், மற்றும் ஏழூர் நாட்டினருக்கும், இன்னும் அவைகளைச் சேர்ந்த சிற்றூர் நாட்டினருக்கும், பெரியோர் வாக்கினை அங்கீகரித்து ஒற்றுமை கொண்ட திரு. பழனியப்பமுதலியார் அவர்களுக்கும்,இந்நற்காரியங்களுக்கெல்லாம் காரணமாய் நின்று நமது மடாலயத்தை நன்முயற்சியோடு கட்டிமுடித்த திரு. ம. நஞ்சப்பமுதலியார் அவர்களுக்கும் யாம் பெரிதும் மனமுவந்து வந்தனமளிக்கின்றோம். இவ்வாறு எல்லாம் இனிது முடியத் திருவருள் பாலித்த நங்குல தெய்வமாகிய முருகப்பெருமானாரது இணைமலர்த் தாள்களை யிறைஞ்சுவோமாக. சுபம். சுபம். சுபம்

இங்ஙனம்,
V.K.M. அப்பா,
ஸ்ரீவிநாயக சன்மார்க்க சங்கக் காரியதரிசி,
மருதவரை நிழல் வடவழி.

### தஞ்சைஜில்லாவில் கிளர்ச்சி.

#### தென்னஞ்சார் செங்குந்த வாலிபர் மகாஜனசபை.

தென்னஞ்சார் ஸ்ரீபெரியமூர்த்தி அய்யனார் சன்னதியில் 15-9-28 சனிக்கிழமைதினம் மாலை5-மணிக்கு மேற்படி சபையின் முதலாவது கூட்டம் நடைபெற்றது.

#### சபையின் அமைப்பு.

சபைத்தலைவர் — திருவாளர் N.T.முத்துராமகிருஷ்ண முதலியாரவர்கள், உபதலைவர், திருவாளர் T. T. தக்ஷிணாமூர்த்தி முதலியாரவர்கள், பொக்கிஷதார் திருவாளர் T.G. காளிமுத்துமுதலியாரவர்கள், திருவாளர், V. K. குப்புசாமி முதலியா ரவர்கள், காரியதரிசி திருவாளர் N. சட்டநாதமுதலியாரவர்கள்.

#### சபையில் நடைபெற்ற விஷயங்கள்.

மேற்படியூர் திரு. T.G. காளிமுத்து முதலியார் அவர்களால் கடவுள் வணக்கம் பாடப்பட்டபிறகு காரியதரிசி திரு. N. சட்டநாதமுதலியார் அவர்கள் 'ஒற்றுமை' என்பதுபற்றி யாவரும் நன்குணருமாறு வெகு தெளிவாக நீண்டதோருபன்னியாசம் செய்தார்கள். பிறகு அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(1) செங்குந்த மக்களாகிய நாம் முன்னேற்றமடையவேண்டுமாயின் நமக்குள் முதலாவது ஒற்றுமையிருக்கவேண்டும்.

(2) சங்கத்தைச்சேர்ந்த ஒவ்வொருவரும் தவறுது குறித்த விடத்திலும் காலத்திலும் குழுமவேண்டும்.

(3) எந்தக் காரியமும் சங்கத்தில் தீர்மானிக்கப்பட்ட பிறகே செய்யவேண்டும்.

(4) நம் முன்னேற்றத்திற்காகச் செங்குந்த உலகமெங்கும் உலாவிவரும் நம் செங்குந்த மித்திரனை ஒவ்வொருவரும் ஆதரிக்கவேண்டும்.

(5) தலைவர் சொல்லுகின்ற ஒவ்வொரு விஷயங்களையும் நன்குணர்ந்து அங்கத்தினர் யாவரும் அதன்படி நடக்கவேண்டும்.

(6) ஒவ்வொரு அங்கத்தினரும் மாதாமாதம் ஒரு அணா சந்தா செலுத்தவேண்டும்.

(7) பிரதிவாரமும் ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு சபை கூடவேண்டுமென்றும் நன்மைபெற விரும்பிய இச்சபைச் சிறுவர்களது கோரிக்கை நிறைவேறும்படி தலைச்சங்கம் உதவியாயிருக்கவேண்டுமென்று இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறதென்றும் தீர்மானிக்கப்பெற்று காரியதரிசி அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பெற்று 9-மணிக்கு சபை இனிது கலைந்தது.

N. சட்டநாத முதலியார்,
காரியதரிசி.

### திருமலைராஜன் பட்டணம் செங்குந்த வாலிபர் சங்கம்.

நிகழும் விபவஹு ஐப்பசிமீ 15உ மாலை 5-மணிக்குத் திருமலைராஜன் பட்டணம் ஸ்ரீசெங்குந்த விநாயகப் பெருமானுக்கு விசேஷ அபிஷேகஆராதனைகள்

நடைபெற்றது. 6-மணிக்குச் செங்குந்தர்கள் திரளாகக் குழுமினர்கள்.

தேவார திருவாசகாதி அருட்பாக்கள் அன்புடன் இன்னிசைக் கருவிகளுடன் திருக்கூட்டத்தாரால் ஓதப்பட்டது. அக்கூட்டத்திற்கு திரு. சு. நாகலிங்க முதலியார் அவர்கள் அக்கிராசனம் வகித்து முகவுரையாக "சங்கம் இருக்கவேண்டியது அவசியம்" என்பதைக் கூறியபிறகு, திரு. வீ. கோவிந்தசாமி முதலியார் அவர்களால் விநாயகர் திருவவதாரமும், திரு. சா. சௌரிராஜ முதலியார் அவர்களால் மனுநீதிகண்ட சோழன் சரித்திரமும், திரு. சி. சிவபெருமான் முதலியார் அவர்களால் இளையான் குடிமாறநாயனார் சரித்திரமும், திரு. ப. சண்முகமுதலியார் அவர்களால கல்வி என்னும் விஷயமும் உபந்நியாசிக்கப்பெற்றன. பிறகு தலைவர் அவர்களால் ஒவ்வொரு உபந்நியாசங்களைப் பற்றியும் முடிவுரை சொல்லப்பெற்று, கந்தர் சஷ்டி என்னும் விஷயம் உபந்நியாசிக்கப்பெற்றது.

அக்கூட்டத்தில் செங்குந்த வாலிபர் சங்கம் ஏற்படுத்தப்பட்டு அதற்குத் திருவாளர் வ. சு. ஆறுமுக முதலியார் அவர்கள் தலைவராகவும், திரு. கு. உத்தண்டி முதலியார் அவர்கள் உபதலைவராகவும், திருவாளர்கள் சு சிங்காரவேலு முதலியாரையும் சி. சிவபெருமான் முதலியாரையும் காரியதரிசிகளாகவும், பலர் நிர்வாக அங்கத்தினராகவும், நியமிக்கப்பெற்றனர். பின்னர் நமது தலைச்சங்கமாகிய தென்னிந்திய செங்குந்த மகாஜனசங்கத்திற்கு வருஷம் ஒன்றுக்கு ரூபாய் ஐந்து கட்டணமாகச் செலுத்துவதாகவும் முடிவு செய்யப்பெற்றது.

காரியதரிசியாகிய திரு. சு சிங்காரவேலு முதலியார் அவர்கள் வந்தனோபசாரம் கூறியதும் சந்தன தாம்பூலம் வழங்கப்பெற்று இரவு 11-மணிக்குக் கூட்டம் முடிவுபெற்றது.

சா. மா. சு. சிங்காரவேலுமுதலியார்,
காரியதரிசி.

## திருச்சி ஜில்லாவில் கிளர்ச்சி.

### கட்டிபாளையம்.

16-11-28 விபவ௵ கார்த்திகை௴ 1௳ சக்கிரவாரத்தன்று இரவு 8-மணிக்கு கட்டிபாளையம் செங்குந்தர் சங்கக்கூட்டம் குழுமியது மேற்படி கூட்டத்திற்கு சங்க மெம்பர்களும் இதர செங்குந்தர்களுமாக சுமார் 50 ஜனங்கள் வரை கூடியிருந்தனர் மேற்படி கூட்டத்திற்கு திருவாளர் சிவகிரி முதலியார் அவர்கள் தலைமை வகித்தனர். திருவாளர் சு. பழனியப்பனால் கடவுள் ஸ்துதி பாடியபின் திருவாளர் ஆ. கணபதி முதலியார் அவர்களால் கந்தர் ஷஷ்டி விஷயத்தைப் பற்றியும் சிவாலய தரிசனவிதிகளைப் பற்றியும் உபந்நியாசம் செய்யப்பட்டு வந்தனோபசாரத்துடன் இரவு 10-மணிக்கு சபை இனிது நிறைவேறியது.

ப. ஆறுமுக முதலியார்,
காரியதரிசி, கட்டிபாளையம் செங்குந்தர் சங்கம்.

## சேலம் ஜில்லாவில் கிளர்ச்சி.

### மோகனூர் உண்மைச் செங்குந்தர் சங்கம்.

3-11-28௳ வழக்கம்போல் இவ்வூர் ஸ்ரீமாசடச்சியம்மன் ஆலயத்தில் 3-வது கூட்டம் 5-மணிக்கு கூடிற்று மேற்படி கூட்டத்திற்கு திருவாளர் தலைவர் அவர்கள் வராமையால் உபதலைவர் திருவாளர் மூ. குழந்தைசாமி முதலியாரவர்கள் தலைமை வகிக்க கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேறின. ஸ்ரீமான் வெ. முருக முதலியாரவர்கள் கடவுள் வாழ்த்து கூறியபின் ஸ்ரீமான் காரியதரிசியவர்களால் முன் கூட்டத்தின் நடவடிக்கைகளும் வரவு, செலவு கணக்குகளும் வாசிக்கப்பெற்றதும் பிரம்மஸ்ரீ நமது குருநாதர் கூனம்பட்டி ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளிடமிருந்து வந்த ஸ்ரீமுகத்துக்கு வரி வசூல் செய்ய கூட்டத்தாரால் தீர்மானிக்கப் பெற்ற வரிகளை மறுதினமே திருவாளர் நாட்டாண்மைக்காரருடன் ஐந்துபேர் கூடியிருந்து வசூலித்து மேற்படி சுவாமிகளின் சேவகரிடம் கொடுத்தனுப்புவதாய்த் தீர்மானிக்கப்பெற்றுப் பாவடி புளியந்தோப்பு நந்தவனம் தென்னம்பிள்ளை வகையறாக்களை 5-11-28 திங்கட்கிழமை 4-மணிக்கு நாட்டாண்மைக்காரர் இருந்து மேற்படி மாசூல்களை ஏலம் விடுவதென்று தீர்மானிக்கப்பெற்று சந்தாவசூலிக்கப்பெற்று தலைவர் முடிவுரைக்குப்பின் இரவு 9-மணிக்கு கூட்டம் இனிது கலைவுற்றது.

சு. சடையப்ப முதலியார்,
காரியதரிசி, உண்மைச் செங்குந்தர் சங்கம்.

## சேலம் அம்மாபேட்டை செங்குந்த வாலிபர் சங்க ஆண்டு விழா

அம்மாபேட்டை பழைய பிள்ளையார் கோவில் கட்டடத்தில் 14-11-28லும் 15-11-28லும் நடந்த மேற்கண்ட சங்க முதலாண்டு விழாவிற்கு ஸ்ரீலஸ்ரீ ஞானியார் மாணவர்கழக செந்தமிழ்த்திலகம் திருக்காஞ்சி அண்ணாமலை முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். 14-11-28௳ காலை 7-மணி முதல் மேளவாத்தியத்துடனும் ஜே கோஷத்துடனும் சிறப்பாக ஊர்வலம் வந்து தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு ஜே என்ற ஆரவாரத்துடன் தலைவரவர்கட்கு பூமாலை சூட்டப்பட்டு எல்லோரும் அமைதியுடன் மேற்படி கோயிலில் அமர்ந்தார்கள். பின்னர் இன்னிசைக்கருவிகளுடன் தமிழ் மறை ஓதப்பட்டு உபதலைவர் திரு. P. R. சோமசுந்தர முதலியார் அவர்களால் தலைவரவர்கட்கு வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. மேற்படியார் வருடாந்திரிபோர்ட் வாசித்ததும் தலைவர் முன்னுரையுடன் 11-மணிக்கு சபை இனிது ஓய்வு பெற்றது.

மாலை 2½-மணிக்கு நமது செங்குந்த குலமக்களும் சங்கத்தினரும் சுமார் 500 ஜனங்கள்வரை குழுமினர்கள். அச்சமயம் திரு. P. மாரியப்பன் என்ற அழகேசனால் கடவுள் வாழ்த்து கூறப்பட்டு திருவாளர்கள் சங்கத்தலைவர் T. R. அருணசல முதலியார் உபதலை



வர் P. R. சோமசுந்தர முதலியார், காரியதரிசி S. ஆறுமுக முதலியார், S. கந்தசாமி முதலியார், A. மாரிமுத்து முதலியார், A. தியாகராஜ முதலியார், மாணவர் R. P. அருணஜலம், சதாசிவசாமியார், M. P. பொங்கியா முதலியார், T. R. ஆறுமுக முதலியார், P. A. மாரியப்ப முதலியார், A. L. பழனியப்ப முதலியார், P. அர்த்தனாரி முதலியார், கவிராயர் அருணசல முதலியார், S. மன்றுத முதலியார், காரியதரிசி A. நாகலிங்க முதலியார் இவர்கள் 'அன்பு', 'ஒற்றுமை', 'பிறவியின் பயன்'. 'இல்வாழ்க்கை', 'புலால் மறுத்தல்', 'பெரியாரைத் துணைக்கொள்', 'கல்வி' 'மோகத்தின் நிலை', 'கல்வியின் மாண்பு', 'கொல்லாமை', 'குரு பக்தி', 'பிறர்மனை நயவாமை' 'நல்லாமை', 'மறுமையின் நோக்கம்', 'முயற்சி', 'சங்கத்தின் அவசியம்' என்னும் விஷயங்களைப்பற்றி சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். தலைவர் பின்னுரை கூறியதும் முனிசிபல் கவுன்சிலர் திரு. S. பெரியசாமி முதலியார் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு சபை 6-45 மணிக்கு இனிது நிறைவேறியது.

மறுநாள் 15-11-28-ல் மாலை 2½-மணிக்கு சுமார் 600 குலமக்கள் குழுமினர்கள் ½-மணி நேரம் வரை இன்னிசைக் கருவிகளுடன் தமிழ் மறை ஓதப்பட்டு கடவுள் வாழ்த்து நடந்ததும் தலைவர் முன்னுரை கூறினார். பின்னர் அமுர்தலிங்க முதலியார், திருவாளர்கள் E. R. பஞ்சாபகேசய்யர், B. T. நம்மாழ்வார், வரதராஜுலு, F. A. வகுப்பு மாணவர், சென்னகிருஷ்ணம் பிள்ளை ஆசிரியர், S. பெரியசாமி முதலியார் முனிசிபல் கவுன்சிலர் இவர்கள் முறையே பூமாலை சூட்டப்பட்டு 'செங்குந்தர்களின் தற்கால நிலைமை', 'சினம்', 'ஒழுக்கம்', 'பத்திரிகையின் அவசியம்', 'ஜீவகருணை', 'சகைத்தின் நோக்கம்,' என்ற விஷயங்களைப் பற்றி அதிவிமரிசையாகச் சொற்பெருக்கிட்டனர். தலைவர் பின்னுரை மொழிந்ததும திரு. குப்புசாமி செட்டியார் அவர்கள் வந்தனோபசாரம் கூற, ஆறுமுகக்கடவுளுக்கு கற்பூர தீபாராதனை பிரகாசிக்க, தலைவரவர்களுக்கும் மற்றுமுள்ளவர்களுக்கும் சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டு சபை 7-மணிக்கு இனிது முடிவு பெற்றது எனச் சங்கத் தலைவர்கள் நமக்கு அறிவிக்கிறார்கள்.

## மோகனூரில் நமது வெற்றி.

நாமக்கல் தாலுக்கா மோகனூர் யூனியன் போர்டில் 5-10-28 நடந்த தேர்தலில் மோகனூர் செங்குந்த சங்க பொக்கிஷதாரும், சொக்க லாவாதேவி செய்பவரும் 7.வருடம் யூனியன் சேர்மனாயிருந்தவருமாகிய திருவாளர் P. P. முத்துசாமி முதலியார் அவர்களை அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்ததைப் பற்றி மிகவும் அகமகிழுகின்றோம்.

இவ்வருடம் போட்டியாகநின்ற திரு. குப்பண்ணப்பிள்ளைக்கு 13 ஓட்டும், திரு. P. P. முத்துசாமி முதலியார் அவர்களுக்கு 63 ஓட்டும் கிடைக்கப்பெற்றது 12-10-28 மோகனூர் யூனியன் போர்டு சேர்மென் தேர்தலில் மேற்படி முதலியார் அவர்களையே சேர்மனாகத் தேர்ந்து எடுக்கப்பெற்றதைக் கேட்டு பெரிதும் சந்தோஷிக்கின்றோம்.

## இராமநாதபுரம் ஜில்லாவில் கிளர்ச்சி.

### மண்டலமாணிக்கம் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்.

7-11-28௳ இரவு 9-மணிக்கு இவ்வூர் செங்குந்த முதலியார் அபிவிருத்தி சங்கத்தின் 10-வது கூட்டம் சந்தனுமுதலியார் பிள்ளையார் கோவிலில் சங்கத் தலைவர் ஸ்ரீமான் கருணைவள்ளல் மு ஆ. பாதாம்பிரியமுதலியாரவர்கள் தலைமையின்கீழ் கூடிற்று. திரு. சிவகுருநாதனவர்களால் கடவுள் வாழ்த்துப்பாட்டு ஆரம்பித்து தலைவர் முன்னுரையானதும் சங்கக் காரியதரிசியவர்களால் சென்ற கூட்டத்தின் நடவடிக்கைகள் வாசிக்கப்பட்டது. பின் உபதலைவர் ஸ்ரீமான் ஞா. சு. மு. பாதாம்பிரியா முதலியாரவர்களால், சங்கமும் இருப்பிடமும் என்பதைப் பற்றி விஸ்தாரமாகப் பேசினார்கள். அதையொட்டி காரியதரிசி ஸ்ரீமான் இ. முனியப்ப முதலியாரவர்கள் தற்சமயம் நமது சங்கம் மடத்திலிருக்கிறதென்றும் சங்கத்துக்கென்று தனிக்கட்டடம் ஒன்று ஏற்படுத்த வேணுமென்ற விஷயமாய் அநேக தடவை பேசியும் அதை அமுலுக்குக் கொண்டுவராதது போன்று இனியும் தாமதியாது கூடிய சீக்கிரம் சங்கத்துக்கு ஒரு தனிக்கட்டடம் அவசியம் ஏற்படுத்த வேணுமென்றும் விபரமாகப் பேசினார்கள். பின் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு காரியதரிசியவர்களால் வந்தனோபசாரஞ் செய்து இரவு 11-மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது.

### தீர்மானங்கள்.

1. நம் சங்கத்துக்கென்று ஓர் புதுக்கட்டடம் கட்டுவதென்று யோசித்திருப்பதால் அதுவரை நம் சங்கம் ஒரு வாடகைக் கட்டடத்திலிருக்க வேணுமென்று தீர்மானிக்கப்பட்டது.

2. நமது சங்கக்காரியதரிசியவர்கள் நாடகத்தில் ஆக்டு செய்தது நன்றாயிருந்ததைக் கண்டு நன்மதிப்பு சங்கத்தின் மூலம் செய்ததை ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டது.

3. நம் கிராமத்தில் வில்லேஜ் பஞ்சாயத்து ஏற்படுவதென தகவல் தெரிவதால் அதில் சங்கமெம்பர்கள் 2 பேர் அபேக்ஷகர்களாக நிற்கவேணுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

மண்டலமாணிக்கம் இ. முனியப்ப முதலியார்,
8—11—28. காரியதரிசி.

## திருநெல்வேலி ஜில்லாவில் கிளர்ச்சி.

### செங்குந்தர் அபிவிருத்தி சங்கம், அம்பாசமுத்திரம், விசேடக் கூட்டங்கள்.

நிகழும் விபவ௵ புரட்டாசி௴ 29௳ (14-10-28) ஞாயிற்றுக்கிழமை மாலை 6-மணிக்கு ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் கோவில் முன் மணி மண்டபத்தின்கண் நம் சங்க ஆதரவில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. அவ்வமயம் பல வகுப்பு அன்பர்களும் விஜயம் செய்

திருந்தார்கள் முதலில் செங்குந்த தேவாரகோஷ்டி மாணவர்களால் இன்னிசைக் கருவிகளுடன் தேவாரம் ஓதப்பெற்ற பின்னர் வடமொழி தென்மொழிவல்லுநரும் வேதாந்தசித்தாந்த சமரசருமாகிய ஸ்ரீலஸ்ரீ கா. சிவானந்த சுவாமிகள் 'மனிதர் கடமை' என்னும் விஷயம் பற்றி அரியதோர் உபந்நியாசம் செய்தார்கள். மற்றும் அறிவிற் சிறந்த பெரியோர் களும் சன்மார்க்கத்தைப்பற்றி உபந்நியாசித்தார்கள்.

நாளது ஆண்டு ஐப்பசிமீ 1௳ (14-10-28) புதன் கிழமையன்றும் ஷை ஸ்தலத்தில் ஸ்ரீலஸ்ரீ கா. சிவானந்த சுவாமிகள் அவர்களால 'முருகக்கடவுள் பெருமை' என்பதைப்பற்றி உபந்நியாசம் நடைபெற்றது. இறுதியில் ஒவ்வொரு கூட்டத்தன்றும் வந்தனோபசாரங்கள் கூறப்பட்டு மாணவர்களால் கடவுள் வாழ்த்து பாடி முறையே விசேடக்கூட்டங்கள் இனிது நடைபெற்றன.

**மாதாந்தர 5-வது கூட்டம்.**

1104-ம்௵ ஐப்பசிமீ 24௳ (9-11-28) சுக்கிர வாரம் இரவு எட்டுமணிக்குச் சங்கத்தலைவர் திரு ரா. வேலாயுத முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் கூடிற்று. செங்குந்தர் தேவாரகோஷ்டி மாணவர்களால் கடவுள் வணக்கம் பாடி கூட்டம் ஆரம்பிக்கப் பட்டது. காரியதரிசி முன் கூட்டத்தின நடவடிக்கைகளையும் வரவுசெலவு கணக்குகளையும் வாசித்துக் காட்டினர். பின்னர் திரு. மி. ஆறுமுக முதலியார் அவர்கள் 'அறஞ்செய விரும்பு' என்பதுபற்றி அரிய சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். அப்பால் திரு. ச. சு. அகஸ்திய முதலியார் அவர்கள் 'குரு பக்தி' என்னும் விஷயத்தை மிகத் தெளிவாக யாவர் மனதிலும் பக்தி உதிக்குமாறு பேசினர்கள் மழை மிகுதியால் மற்றுள்ள அறிஞர்களின் சொற்பொழிவுகள் நிறுத்தப்பட்டன. இறுதியில் அவைத்தலைவர் அவர்கள் தமது பின்னுரையை இனிது நிகழ்த்தினர்கள். காரியதரிசியவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கோஷ்டி மாணவர்களால் கடவுள் வாழ்த்துப்பாடி கூட்டம் இனிது நடந்தேறியது.

ஆ. ம. ஆறுமுக முதலியார்,
ரா. ம. ராமலிங்க முதலியார்,
காரியதரிசிகள்.

---

## அற்பிசி மாதத்திற்குத் தலைச்சங்கத்துக்குச் செலுத்திய மகமை உண்டியல் கட்டண விவரங்கள்

**சென்னை.**

| | | | |
|---|---|---|---|
| திரு. தி. ச. ராம. இராமசாமி முதலியார் அவர்கள் வரவு .... | 12 | 0 | 6 |
| மதராஸ் பனியக்காட்டுக் கம்பெனி வரவு .... | 37 | 9 | 0 |
| திரு. S. K. M. காயாரோகண முதலியார் அவர்கள் வரவு ... | 28 | 0 | 0 |

**சைதாப்பேட்டை.**

| | | | |
|---|---|---|---|
| இம்பீரியல் பனியக்காட்டுக் கம்பெனியார் ஆவணி, புரட்டாசி ஐப்பசிக்கு வரவு ... | 1 | 8 | 0 |
| திரு. செ. ஆ. வை. காளத்தி முதலியார் அவர்கள் ஐப்பசிமீ வரவு .... | 6 | 10 | 0 |
| கிரேட் பனியக்காட்டுக் கம்பெனி ஐப்பசிமீ வரவு ... | 3 | 10 | 4 |

**ஈரோட்டார் மகமை (ஐப்பசிக்கு.)**

| | | | |
|---|---|---|---|
| ஊர் வசூலில் ஏழிலொரு பங்கு .... | 5 | 0 | 0 |

(ஆறிலொருபங்கென சென்றமாதம் பிரசுரித்ததை ஏழிலொரு பங்கென்று திருத்திக்கொள்ளும்படி ஈரோட்டு நாட்டாண்மை திரு. செ. இராமசாமி முதலியார் அவர்கள் எழுதியிருக்கின்றார்கள்.)

**கிளைச்சங்க கட்டணம்.**

| | | | |
|---|---|---|---|
| மானும்பதி ... | 15 | 0 | 0 |
| பொன்னூர் ... | 12 | 8 | 0 |

**உபகாரச்சம்பள நன்கொடை.**

| | | | |
|---|---|---|---|
| புதுவை ஆ. வே. முத்தைய்ய முதலியார், B.A., B.L., ... | 10 | 0 | 0 |
| நன்கொடை நெல்லிக்குப்பம் T. வைத்தியலிங்க முதலியார் .... | 2 | 8 | 0 |

---

**விகடம்**

ஒரு வழுக்குத்தலை வைத்தியன் உதிர்ந்துபோன தலையயிரை உண்டாக்கி வளர்க்கக்கூடிய உத்தரவாதமான ஒரு மருந்தைப்பற்றி விளம்பரம் செய்திருந்தான். அவனிடத்து ஒரு பெண் வந்து வைத்தியரே உம்முடைய மருந்து உதிர்ந்த மயிரை உண்டாக்கக் கூடியதுதானா? என்றாள்.

வைத்தியன்:—அதற்கென்ன தடை 24-மணி நேரத்தில் மயிர் வளர்ந்து விடும். உத்தரவாதம்'.

பெண்:—அப்படியானல் அந்த மருந்தை உம்முடைய தலையில் இப்போது தடவிக்கொள்ளும் நாளைக்கு மயிர் வளர்ந்திருந்தால் நான் அப்போதே வாங்கிக்கொள்ளுகிறேன்.



### வடஆற்காடு ஜில்லா

**தக்கோலம்.**

செ. முருகப்ப முதலியார்
செ. க. ஏகாம்பர ,,
ஆ. ராமகிருஷ்ண ,,
ராயுமானவ ,,
செ. சதாசிவ ,,
டம்பூர் ஆறுமுக ,,
லெ. குப்புசாமி ,,
. கிருஷ்ணப்ப ,,
. வடிவேல் ,,
ந்தப்ப சோமசுந்தர ,,
செ. நை. ஜலநாத ,,
டமாயவ ,,
கை. மா. திருவூரி ,,
செ. தி. முருகப்ப ,,
சிதம்பர ,,
செ. மெ. சிங்கார ,,
தி. ம. வையாபுரி ,,
அங்குமாரப்ப ,,
ந. கு. கோவிந்த ,,
ட. ராகவ ,,
செ. தணிகாசல ,,
. சோ. பெருமா ,,
ஆ. வே. சரவண ,,
. ம. முருகப்ப ,,

**சித்தாத்தூர்.**

அருணேச ,,

**பணப்பாக்கம்.**

ரா. ரா. சின்னையா ,,
ரா. ரா. மாணிக்க ,,
. ச. கோவிந்த ,,
ரா. மு. குட்டி ,,
பா. தா. எல்லப்ப ,,
சி. கு. ரா. நாராயண ,,
ந. கிஷ்டப்ப ,,
பூ. செல்லமுத்து ,,
அ. நடேச ,,
சந்து. சின்னகுழந்தை ,,
ச. சி முருகேச ,,
திருக்காளத்தி செங்கல்வராய ,,
கி. கு. கந்தசாமி ,,
கிரை. மு. உலகநாத ,,
அன்னுசி எல்லப்ப ,,
ரா. இலட்சுமண ,,
ந. வெ. பாலசுந்தர ,,
மச்லி. வெங்கடாசல ,,

**நாகவேடு.**

பூ. கி. காட்டகத்தி ,,
செ. கு. முனிசாமி ,,
செ. வெ. தணிகாசல ,,

**பொன்னூர்.**

அ. குமாரசாமி ,,
கு. அ. பூங்காவண ,,
[illegible] நாராயணசாமி ,,

மணி. சாமி முதலியார்
பெரியதனம் வேதாசல ,,
அ. அம்பலவாண ,,
அ. கு. ஐயாதுரை ,,
செ வெ. பெருமாள் ,,
க. சு. பொன்னுசாமி ,,
அ. அ. பெருமாள் ,,
அ. கி. முனியப்ப ,,
மொ. நாராயணசாமி ,,
அ. மு. தங்கவேல் ,,
வ. முனியப்ப ,,
அ. அ. வெங்கடாசல ,,
ஏ. சின்னதம்பி ,,

**வந்தவாசி.**

T. கோவிந்தராஜு ,,

**அம்மியப்பட்டு.**

பு. சு. சடையப்ப ,,
கி. ரா. ஆறுமுக ,,
அ. க. அப்பாவு ,,
பொ. சி. சாமிநாத ,,
சு. பாலசுந்தர ,,
முத்து முனிசாமி ,,
கு. இராஜு ,,
தா. மு. கிருஷ்ணசாமி ,,
வ. அருணாசல ,,
தி. மு. சுந்தர ,,
ம. அ. வேலு ,,
கோ. வி. நடேச ,,

**கொடுங்காலூர்.**

வை. முனிசாமி ,,
கு. கன்னியப்ப ,,
மு. சித்திரவேல் ,,

**துண்ணகம்பூண்டி.**

கொ. தங்கவேல் ,,
ஊ. க. விநாயக ,,

**துண்ணம்பூண்டி புதூர்.**

ந. ர. எத்திராஜ ,,
ஐ. ர. கோவிந்தராஜ ,,
பி. ச. ஈஸ்வர ,,
ஐ. க. நடேச ,,
பி. வ. குமாரசாமி ,,
ஐ. துரைசாமி ,,
ஆ. குட்புசாமி ,,
ஆ. வீராப்பெருமாள் ,,

**நாசிங்கபுரம்.**

ச. ஏகாம்பர ,,
ம. முருகப்ப ,,

**மீன்னல்.**

P. N. முனிசாமி ,,

**ஆரணி சைதாப்பேட்டை.**

ச. பார்த்தசாரதி ,,

**வாழப்பந்தல்.**

பு. பொ. கங்காதர ,,

### செங்கல்பட்டு ஜில்லா

**ஐயங்கார்குளம்.**

வ. ச. குப்புசாமி முதலியார்
த. காங்கேய ,,
சின்னு. இராமசாமி ,,
தணியம் அ. க. கணேச ,,
அமபலம் குருசாமி ,,
ப. வே. அருணாசல ,,
சு. பொன்னம்பல ,,
மொ. நா. சண்முக ,,

**பெருநகர்.**

ப. தில்லை ,,
தம்பு V. S. நடேச ,,
சு. பிச்சலிங்க ,,

**மானும்பதி.**

தா. சுப்புராய ,,
அ. பசுபதி ,,
நா. சுமந்தமூர்த்தி ,,
க வேலாயுத ,,
சொ. வேணுகோபால் ,,
R. குருசாமி ,,
இ. அருணாசல ,,
வை. சுப்புராய ,,
அ. ஜெகநாத ,,
வ. இரத்தின ,,
க. காவத்தி ,,
ர. பொன்னுசாமி ,,
சு. முத்துக்குமாரசாமி ,,
மு. சபாபதி ,,
அ. சின்னசாமி ,,
இ. வேலாயுத ,,
ரா. கு. சுந்தர ,,
ரா. துரைசாமி ,,
மு. அண்ணாமலை ,,
தா. ஜெகநாத ,,
பொ. நடேச ,,
மு மாணிக்க ,,
மு. இரத்தின ,,
அ. நடேச ,,
தா. கணபதி ,,
க. சரவண ,,
த. முருகேச ,,
செ. குப்புசாமி ,,
சு. தக்ஷணாமூர்த்தி ,,
அ. துரைசாமி ,,
கந். இரத்தின ,,
அ. முருகேச ,,
மு. குமாரசாமி ,,

**சைதாப்பேட்டை**

ஆ. மு. முத்துவேல் ,,
தி. சி. முருகேச ,,

**காஞ்சிபுரம்.**

கா. மு. நடேச ,,
மு. சுப்புராய ,,

**இராணியசித்தி.**
வை. சிங்காரவேல் முதலியார்
**செய்யூர்.**
இ. வன்மீக ,,
**போலம்பாக்கம்.**
க. லோக ,,
சு. வீராசாமி ,,
**கயப்பாக்கம்.**
சந்தி ஆ. கந்தசாமி ,,
**சென்னை.**
M. சமரபுரி ,,
**கோயம்பத்தூர் ஜில்லா.**
**ஊத்துக்குழி.**
M. C. செங்கோட ,,
M. K. குளந்தையப்ப ,,
M. K. சென்னிமலை ,,
K. சென்னியப்ப ,,
S. K. சுப்புராய ,,
K. கனகசபை ,,
V. K. பாட்டப்ப ,,
K. சின்னைய ,,
**முங்கில்பட்டி.**
பு. க. காளியண்ண ,,
**மேவாணி.**
பெ. ஆறுமுக ,,
**சேரமயனூர்.**
மருதாசல ,,

**செங்காளிபாளையம்.**
V. பழனியப்ப முதலியார்
**செட்டிப் பாளையம்.**
C. P. கந்தசாமி ,,
**உத்தண்டியூர்.**
K. P கனகசபாபதி ,,
**மதுரை ஜில்லா.**
**பழனி.**
வே. மு. மா. குழந்தைவேலு ,,
**தாடிக்கோம்பு.**
N. A. நாச்சிமுத்த ,,
**திருநெல்வேலி ஜில்லா.**
**அம்பாசமுத்திரம்.**
க. பாபநாச ,,
மு. சுப்பையா ,,
அரு. சு. வேலாயுத ,,
ம. இராமலிங்க ,,
ஆ. பாடலிங்க ,,
**தஞ்சாவூர் ஜில்லா.**
**திருவாரூர்.**
தி. கு. ராம. இராமசாமி ,,
**திருமலைராஜன் பட்டணம்.**
ம. சா. இரத்தினசபாபதி ,,
சி. சண்முகவேலாயுத ,,
**திருநள்ளாறு.**
முத்திய நடேச ,,
ஆ. ஆறுமுக ,,

**கோரநாடு.**
N. மாணிக்க முதலியார்
**தென் ஆற்காடு ஜில்லா.**
**லால் பேட்டை.**
தொ. சி சிவகொழுந்த ,,
**புருகேசப் பேட்டை.**
மு. பொன்னுசாமி ,,
மு இராமசாமி ,,
எ. ச. வேலாயுத ,,
**இராமநாதபுரம் ஜில்லா.**
**நாயனூர் கோவில்.**
ச மு. மருதவீரபாண்டிய ,,
**பலவான்குடி.**
ம. க. சரவணப்பெருமாள் ஓதுவார்
**வேலநத்தம்.**
கு. வை. ஆ. செங்கோட ,,
**புதுச்சேரி**
பழனி வையாபுரி ,,
**முத்தியாலுப் பேட்டை.**
அ. ஷண்முக ,,
**சோக்கநாதம்பேட்டை.**
S. P. மாணிக்க ,,
**ரங்கூன்.**
K. V. சேவுக ,,
க. பதினெட்டாம்படி ,,
க. நாகசுந்தர ,,


| மூலமும் பொழிப்புரையும் | **திருக்குறள்** | விலை அணா 8 |
|---|---|---|

என்னும் பொய்யா மொழியின் புத்துரை
(வலிய புணர்ச்சிகளைப் பிரித்த மூலமும் தெளிய எழுதிய கருத்துரையும்)

சமத்துவம், சகோதரத்துவம், பிறப்பில் உயர்வு தாழ்வின்மை, பெண்ணுரிமை முதலிய அரிய, உயரிய தமிழ்க் கருத்துக்கள் மதர்த்துப்படரும் இக்காலத்தில், அவற்றைப் போதிக்கும் திருக்குறளையும், தமிழ் நெறிபற்றி எழுதிய அதன் உரையையும் தமிழ்க் குடியிற்பிறந்த—தமிழ் நாட்டிற் றோன்றிய—தமிழ்க்கற்ற ஒவ்வொரு ஆண்மகனும், பெண்மகளும் பயன் தெரிந்து ஓதி ஒழுகவேண்டுவது அவசியம்.

இவ்வளவு அவசியமான இத்திருக்குறளுரையை பொருளீட்டும் கருத்தின்றி தமிழ் நாகரீகத்தின் புகழ் நாட்டும் கருத்தோடு நல்ல கிளேஸ் காகிதத்தில் முத்துப்போன்ற சிறிய எழுத்தில் Foolscap 1/8-பெரிய பாக்கெட் அளவில் சுமார் 320 பக்கங்களுக்கு மேற்கொண்ட புத்தகம்.

புத்தகம் 1க்கு திக் ராப்பர் கட்டடம் 0—8—0 காலிகோ கட்டடம் 0—12—0

ஒரு புத்தகம் வேண்டுவோர் தபால்செலவு 0-1-6 சேர்த்து 0-9-6 அணுவுக்குத் தபால் முத்திரைகள் அனுப்பவேண்டும்.

பள்ளி மாணவர்களுக்கு இலவசமாய் வழங்கும் ஜில்லாபோர்டு, தாலூகாபோர்டு, முனிசிபாலிடித் தலைவர்களுக்கும், ஈரநெஞ்சுடைய நன்கொடையாளர்களுக்கும் எவ்வளவு பிரதிகள் வேண்டுமானாலும் 1928 நவம்பர்மீ 30உக்குள் 0-8-0 வீதம் கொடுக்கப்படும். இவர்களை எமது முயற்சிக்கு ஊக்கமளித்து ஆதரிக்குமாறு இறைஞ்சுகின்றோம்.

முன்பண மனுப்பியவர்களுக்கு விபவ ஆண்டு தைத்திங்கள் பொங்கற் புதுநாளன்று கைக்கு வந்துசேருமாறு புத்தகம் அனுப்பிவைக்கப்படும்.

**தமிழ் நூல் பதிப்புக் கழகம், 48, செல்லுக்காரத் தெரு, காஞ்சீபுரம்.**


இடமிருந்து வலம்:—1. ஞாயிறு, 2. திங்கள், 3. உமை, 4. ஓர் குணம், 5. தவஞ்செய்வோன், 6. [illegible], 7. ஓர் மிருகம், 8. பெருச்சாளி, 9. கொத்து, 10. விளையாடும் பொருளிலொன்று, 11. பாட்டு, 12. விலை, 13. காட்டுப்பசு, 15. பெண், 15. தாழை, 16. மழை, 17. ஓர் மரம், 18. விருந்தாளி, 19. கடினம், 20. கடல், 21. ஓர் வருஷம், 22. பிள்ளை, 23. தச்சன், 24. புதன், 25. சம்பந்தன்.

**இனம்!** **வீடு புனை பந்தம் நெம்பர் 1.** **இனம்!**



வலமிருந்து இடம்:—26. ஈசன் பெயர், 27. சாறு, 28. பெருகுதல, 21. ஓர் மரம.
மேலிருந்து கீழ்:—29. ரஜித்தல், 30. தேர், 31. வியாழம், 32 ஈசன் இருப்பிடம், 33. இனை, 34, வித்துவை, 35. மூன்று, 36. ஓர் வருஷம், 37. சங்கன், 38. காசிபர் மனைவி, 3. இந்திரன், 11, நீர், 13. உயிர், 14. விதம், 21. வியாழமகன்.
கீழிருந்து மேல்:—39. காலன், 40. தாரக, 41. செடுதி, 42. பிரியமுடையவன், 24. மன்மதன், 28. தகப்பன்.

## விதிகள்.

1. ஒவ்வொருவரும் சரியான விடைகளை எழுதி அத்துடன் பிரவேச கட்டணமாக 0-4-0 ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.
2. சரியான விடைகளை எல்லாம் ஒன்று சேர்த்துப் பிரைஸ் போடப்படும்.
3. முதல் பிரைஸ் விழுந்தவர்களுக்குத் திருப்பெருந்துறைப் புராணமும், இரண்டாவது பிரைஸ் விழுந்தவர்களுக்கு உயர்ந்த திருமுருகாற்றுப் படையும், மீதியுள்ள சரியான விடைகள் அனுப்பியுள்ளவர்களுக்குத் திருவாசகம் ஒவ்வொன்றும் அனுப்பப்படும்.
4. விடை அனுப்புவோர் 23-12-28க்குள் அனுப்பவேண்டும்.
5. 24-12-28 மாலை 3-மணிக்குத் தக்கவர்கள் முன்னிலையில் பிரைஸ் எடுத்து முடிவு சொல்லப்படும். விடைகள் வேறு காகிதத்திலும் எழுதி அனுப்பலாம்.
6. பதில் வேண்டுவோர் ரிப்ளை கார்ட்டு எழுதவும். முழு விலாசம் விபரமாய் எழுதவும்.
7. விடைகள் தமிழ் ஆராய்ச்சிப்படி உள்ளவற்றைத்தான் ஒப்புக்கொள்ளப்படும்.

இ. சம்பந்தமூர்த்தி முதலியார்,
காரியதரிசி, செங்குந்தர் சங்கம், மானம்பதி.
ராவத்தநல்லூர் கண்டிகை போஸ்டு, (வய) உத்திரமேரூர், காஞ்சிபுரம் தாலூக்கா.

# 'செங்குந்த மித்திரன்' பஞ்சாங்கம்

## விபவஞு மார்கழிம் (1928ஞு டிசம்பர்ம் -1929ஞு ஜனவரிம்) தக்ஷணாயனம் ஹேமந்தருது

| ஆங்கிலேயத். | தமிழ். | வாரம். | திதி. | நக்ஷத்திரம் | யோகம். | நேத்திரம். | ஜீவன். | வா. ஹோரா திதி | யோகினி. | விசேட நாட்கள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| டிசம்பர்ம் | விபவஞு மார்கழிம் | | | | | | | | | |
| 15 | 1 | சனி | திரி, 28-13 | உ, 45-0 | சி, 60 | 0 | ½ | திரி | தெ-கி | கதிரறுக்க, உழவு செய்ய |
| 16 | 2 | ஞா | சது, 32-20 | தி, 49-40 | அ, 49-40 ம | 0 | ½ | சது | தெ-மே | விதை விதைக்க |
| 17 | 3 | திங் | பஞ், 35-25 | அ, 54-15 | சி, 60 | 1 | ½ | பஞ் | தெற் | சுப காரியம் செய்ய |
| 18 | 4 | செவ் | ஷஷ், 37-8 | ச, 56-48 | ம, 60 | 1 | ½ | சஷ் | மேற் | சூரிய விரதம் |
| 19 | 5 | புத | ஸப், 37-15 | பூ, 57-55 | அ, 57-55 சி | 1 | ½ | சப் | வ-மே | ஏற்றம் ஸ்தாபிக்க |
| 20 | 6 | வியா | அஷ், 35-48 | உ, 57-23 | சி, 60 | 1 | ½ | அஷ் | வ-கி | கரிநாள் |
| 21 | 7 | வெ | நவ, 32-35 | ரே, 55-5 | அ, 60 | 2 | ½ | நவ<br>தச | ஆகா | |
| 22 | 8 | சனி | தச, 27-45 | அ, 51-18 | சி, 60 | 2 | 0 | ஏகா | பூமி | மகராயனம் |
| 23 | 9 | ஞா | ஏகா, 21-30 | ப, 46-13 | சி, 60 | 2 | 1 | துவா | கிழ | வைகுண்ட ஏகாதசி |
| 24 | 10 | திங் | துவா, 13-50 | கி, *39-55 | ம, 39-55 அ | 2 | 1 | திர | வட | கிருத்திகை, பிரதோஷம் |
| 25 | 11 | செவ் | திர, 5-20<br>சது, 56-23 | ரோ 33-3 | அ, 33-3 சி | 2 | 1 | சது | தெ-கி | கரிநாள் |
| 26 | 12 | புத | ○, 47-25 | மி, 25-40 | சி, 60 | 2 | 1 | பௌ | தெற் | பௌர்ணமி |
| 27 | 13 | வியா | பிர, 38-18 | தி, 18-25 | ம, 18-25 அ | 2 | 1 | பிர | மேற் | ஆருத்திரா தரிசனம் |
| 28 | 14 | வெ | துதி, 30-3 | பு, 11-45 | சி, 11-45 ம | 2 | 1 | துதி | வ-மே | கர்ப்போட்ட ஆரம்பம் |
| 29 | 15 | சனி | திரி, 22-55 | பூ, 6-0 | சி, 60 | 2 | 1 | திரி | வட-கிழ | யாத்திரை செய்ய |
| 30 | 16 | ஞா | சது, 17-33 | ஆ, 1-45<br>ம, 59-10 | சி, 1-45 ம | 2 | 1 | சது | ஆகா | அவமாகம் |
| 31 | 17 | திங் | பஞ், 13-55 | பூ, 58-58 | சி 60 | 2 | 0 | பஞ் | பூமி | சித்திரம் எழுத |
| 1929ஞு ஜனவரிம் | தனுர்ம் | | | | | | | | | |
| 1 | 18 | செவ் | சஷ், 12-35 | உ, 60 | அ, 60 | 2 | ½ | சஷ் | கிழ | திருதின ஸ்பிருக் |
| 2 | 19 | புத | ஸப், 13-8 | உ, 0-20 | அ, 0-20 ம | 2 | ½ | சப்! | வட | காலபைரவர் அஷ்டமி |
| 3 | 20 | வியா | அஷ், 15-55 | அ, 4-10 | சி, 60 | 1 | ½ | அ | தெ-கி | திஸ்ரேஷ்டகா |
| 4 | 21 | வெ | நவ, 20-28 | சி, 9-33 | சி, 60 | 1 | ½ | நவ | தெ-மே | |
| 5 | 22 | சனி | தச, 26-18 | சு, 16-28 | அ, 16-28 சி | 1 | ½ | தச | தெற் | தானியம் செலவிட |
| 6 | 23 | ஞா | ஏகா, 33-3 | வி, 24-18 | ம, 60 | 1 | ½ | ஏகா | மேற் | மத்வ ஏகாதசி |
| 7 | 24 | திங் | துவா, 40-8 | அ, 32-8 | சி, 60 | 0 | ½ | துவா | வட-மே | கதிரறுக்க |
| 8 | 25 | செவ் | திர, 46-50 | கே, 39-55 | ம, 39-55 அ | 0 | ½ | திர | வ-கி | பிரதோஷம் |
| 9 | 26 | புத | சது, 52-55 | மூ, 47-15 | ம, 47-15 அ | 0 | 0 | சது | ஆகா | மாசசிவராத்திரி |
| 10 | 27 | வியா | ● 58-20 | பூ, 53-45 | சி, 60 | 0 | 0 | அமா | பூமி | சர்வத்திர அமாவாசை |
| 11 | 28 | வெ | பிர, 60 | உ, 59-20 | சி, 59-20 | 0 | 0 | பிர | கிழ | திருதினஸ்பிருக் |
| 12 | 29 | சனி | பிர, 2-35 | தி, 60 | சி, 60 | 0 | 0 | துதி | கிழ | போகி பண்டிகை |

மார்கழிம் 1உ தனுர்மாச பூஜாரம்பம், 4உ மதுரை எண்ணெய்க் காப்பு உற்சவம், சிதம்பரம் முதலிய ஸ்தலங்களில் மாணிக்கவாசகர் உற்சவாரம்பம், 7உ வாயிலார்நாயனார், 8உ இயற்பகை நாயனார், 9உ ஸ்ரீரங்கம் முதலிய விஷ்ணு ஸ்தலங்களில் வைகுண்ட ஏகாதசி உற்சவம், 12உ சடைய நாயனார், 13உ சிதம்பரம் முதலிய சிவஸ்தலங்களில் ஆருத்திர தரிசனம், 21உ மானக்கஞ்சாற நாயனார், 27உ சாக்கிய நாயனார்.